உ

கணபதி துணை.

# ஆசௌசதீபிகை.

இது

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களுடைய

மாணாக்கரும்

வண்ணார்பண்ணைச்சைவப்பிரகாசவித்தியாசாலை

முதலுபாத்தியாயருமாகிய

மா. வைத்தியலிங்க

பிள்ளையால் பரிசோதித்து,

யாழ்ப்பாணம்:

சைவப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சித்திரபானு௵ வைகாசி௴.

1882

உ

கணபதிதுணை.

# ஆசௌசதீபிகை.

இது

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களுடைய

மாணாக்கரும்

வண்ணார்பண்ணைச்சைவப்பிரகாசவித்தியாசாலை

முதலுபாத்தியாயருமாகிய

**மா. வைத்தியலிங்க**

பிள்ளையால் பரிசோதித்து,

யாழ்ப்பாணம்:

சைவப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

---

சித்திரபானு ௵ வைகாசி ௴.

1882

சிவமயம்.

# சூசீபத்திரம்.


| | பக்கம். |
|---|---|
| அதிக்கிராந்தாசௌசம் ... ... ... | ௨௫ |
| அநுலோமர் ... ... ... | ௰ |
| அவாந்தரசமயவிசேடம் ... ... ... | ௭ |
| அழுதல் ... ... ... ... | ௩௭ |
| அறியாமையினிலக்கணம் ... ... ... | ௫௰ |
| ஆசௌசலக்ஷணம் ... ... ... | ௨ |
| ஆசௌசநிமித்தம் ... ... ... | ௫ |
| ஆசௌசத்திரவியம் ... ... | ௨௧ |
| ஆசௌசிபரிசத்திரவியம் ... ... ... | ௨௮ |
| ஆசௌசமத்தியாசௌசம் ... ... | ௨௪ |
| ஆசௌசாரம்பகாலம் ... ... ... | ௨௫ |
| ஆசௌசி அன்னம்புசித்தல் ... ... | ௫௯ |
| ஆசௌசிசம்பந்தம் ... ... ... | ௪௰ |
| ஆசௌசநானம் ... ... ... | ௫௧ |
| அபத்து ... ... ... ... | ௨௨ |
| உபோற்காதம் ... ... ... | ௧ |
| உருத்திரகணிகைமுதலெழுவர் ... ... | ௮ |
| உருத்திராக்ஷம் ... ... ... | ௨௯ |
| ஏகதினம் ... ... ... ... | ௰௯ |
| ஏககாலம் ... ... ... ... | ௰௭ |
| கடவுள்வணக்கம் ... ... ... | ௧ |
| கிராமம் ... ... ... ... | ௨௨ |
| குருவணக்கம் ... ... ... ... | ௧ |
| சத்தியச்சுத்தி ... ... ... | ௰௯ |
| சபிண்டீகரணம் ... ... ... ... | ௪௩ |
| சவஞ்சுமத்தல் ... ... ... | ௫௬ |
| சற்சூத்திரலக்ஷணம் ... ... ... | ௯ |

பக்கம்.
சனனாதிக்கிரமமும், சுமரணத்தில் ஆண்மரணமும். ௰௨
சனனம் ... ... ... ... ௩
சனனகாலம் ... ... ... ... ௨௨
சிவாச்சிரமம் ... ... ... ௬
சுமரணத்திற்பெண்மரணம் ... ... ௰௩
சுவானுகமனம் ... ... ... ௩௪
சைவபேதம் ... ... ... ... ௬
தகனம் ... ... ... ... ௩௨
தாசர் தூதப்பார்ப்பான் கைக்கோளன்முதலினோர் ௰௧
திராவிடகாயகன் ... ... ... ௰
திரிதினம் ... ... ... ... ௰௪
துன்மரணம் ... ... ... ௨௰
துன்மிருதன் ... ... ... ... ௰௭
தொடங்கியகருமம் ... ... ... ௰௮
நாமகரணாதிகளுக்குக் காலநியமம் ... ... ௰௩
நித்தியகருமம் ... ... ... ௨௬
நோயாளனுக்குச்சுத்தி ... ... ... ௰௯
பக்கிணி ... ... ... ... ௰௫
பக்கிணியிலக்கணம் ... ... ... ௰௭
பஞ்சாசாரியர் ... ... ... ௮
பதிதன் ... ... ... ... ௰௮
பிரமசாரி ... ... ... ... ௰௮
புனர்த்தகனம் ... ... ... ... ௩௨
புறனடை ... ... ... ... ௬
பூரணசௌசசங்கை ... ... ... ௫
பூப்பு ... ... ... ... ௨௯
மகாகன்மாதியின்முயன்றோன்முதலினோர் ... ௰௯
லபனம் ... ... ... ... ௪௨
வருணாச்சிரமம் ... ... ... ... ௫
வானப்பிரத்தன், சந்நியாசி, சைவாசாரியன், சாதகன். ... ... ௰௮
விசேடம் ... ... ... ... ௰௪
விசேடம் ... ... ... ... ௨௪

சூசிபத்திரம் முற்றிற்று.

உ

கணபதிதுணை.

# ஆசௌசதீபிகை.

## கடவுள்வணக்கம்.

சீர்கொண்டதருமபுரஞானசம்பந்தேசன்
றிருவடிச்செந்தாமரையெஞ்சிரமேற்கொள்வாம்
போர்கொண்டவிழியுமையாண்ஞானானந்த
பூரணிசெம்பொற்பாதம்புந்தியிருத்திடுவாங்
கார்கொண்டதந்திமுகன்சுந்தரத்தாளிணைவேற்
கந்தனடியிணையினிதெங்கண்ணினமைத்திடுவாம்
நார்கொண்டதிருநந்திகேசுவரன்முதலா
நல்லோரைச்சந்ததமுநாடியிறைஞ்சிடுவாம். (க)

## குருவணக்கம்.

திருவெண்ணெய்மெய்கண்டான்சந்ததிவாழ்கமலை
திகழ்ஞானப்பிரகாசன்றிருவருள்பெற்றெம்பால்
உருவெண்ணைமாற்றியருளுயர்மதுரைக்கதிப
னொளிர்ஞானசம்பந்தனுபயபதம்போற்றிக்
குருவெண்ணெய்வடிவானகுணதீதனருளாற்
கூறியவாகமவிதியுட்கொண்டுமலநோய்க்கு
மருவெண்ணைமாற்றுமெனவருஞ்சனனமரண
வாசௌசம்விதித்தொழிக்குமாறுவகுத்துரைப்பாம்.()

## உபோற்காதம்.

### வேறு.

எற்றநால்வகையிற்றோற்றமெண்பத்துநான்குநூறாச்
சாற்றுமாயிரம்யோனிக்குட்டங்கிடுமுயிர்சடம்மிற்
போற்றருஞானத்தாலும்புண்ணியவிசேடத்தாலும்
ஆற்றிடுமாசௌசங்களடைந்திலசிலவாமென்றும். (௩)

நீடுயர்பாவத்தென்றுநீங்கிடாவாசௌசத்தைக்
கூடுவசிலவிவற்றிற்கூடிடாவுயிர்கடம்மின்
நாடுறுஞ்சிலசாதிக்குநற்சைவத்தோர்க்குநண்ணும்
பீடுயராசௌசங்கள்பிறங்குமிந்நூலிற்சொல்வாம். (௪)

நன்னலவீடுகாட்டுநாதனற்பூசையாதி
பன்னருங்கிரியையெல்லாம்பழுதுறப்பண்ணலாலே
இன்னல்சேராசௌசங்களெடுத்துரைத்திவற்றைவீட்
டும்,அந்நலவிதிகடாமுமறைந்தவாகமங்களெல்லாம். (௫)

வேறு.

ஆதியதிபரமாத்தன்மொழிந்தருள்வாக்கியமா
மாகமந்தானுருயிர்க்குப்புத்திமுத்திகாட்டும்
ஓதுமிலாகுளஞ்சோமம்பாசுபதமென்ன [ம்
வுரைத்திடும்பன்னூல்களினுமுயர்ச்சிமிகவுளதா
நாதன்மொழிபழுதின்மறைப்பொருளனைத்துந்தெரிந்
து நவிலுமியல்பால்வேதசாரமெனப்படுமாம்
ஆதலினால்வைதிகருமாகமநல்விதியே
யதிவிசிட்டவைதிகமென்றறிந்துகொள்கவன்றே.

அறந்தருமாகமத்தினொடுமுரணாதபொருளை
யகன்மிருதிபுராணாதிநூல்விளம்பிற்கொள்க
சிறந்தசிவாகமத்தினொடுமுரணுகின்றபொருளைச்
சேர்ந்தபலநூல்சொலினுந்தீதெனவேவிடுக
நிறைந்தவருட்பரமபதிநிகழ்த்திடுவாக்கியமே
நேர்ந்தபசுவாக்கியங்களனைத்தையும்பாதிக்கும்
பறைந்தபசுவாக்கியங்கள்பலதிரண்டுவரினும்
பதிமொழியைப்பாதிக்கப்பலமிலவென்றுணரே

## ஆசௌசலக்ஷணம்.

வேறு.

புகலரும்புத்திமுத்திபொருந்தவேட்டவரியற்றும்
இகலருநித்தியத்தோடெய்துநைமித்திகாதி

அகலருங்கருமத்தன்னோர்க்கநதிகார*த்தையாக்குந்
நகவுறுமாசௌசங்கள்சாய்ந்திடும்பரிகாரத்தால். (அ)

## ஆசௌசநிமித்தம்.

### வேறு.

ஈற்றுசனனம்மரணந்தகனஞ்செய்திடலே
சவத்தின்பின்னேகிடுதல்சவம்பரித்துப்போதல்
ஆற்றியதோரழுகையுடனாசௌசரன்ன
மருந்திடுதலாசௌசர்தம்முடனேபொருந்தல்
போற்றியநல்லளவுதனில்வபன†மியற்றாமை
புகல்சபிண்டீகரணாதிபுரியாமையெனவே
தோற்றியவித்தசவிதத்தாலாசௌசந்தோன்றுந் தோ
ன்றியவாசௌசமெலாந்திரிவிதத்தாற்றொலையும்.

உரைத்ததிரிவிதங்கூறிற்காலமொடுநான
மோதியவிக்காலநானங்களுமாமுறையே
வரைத்தபுகழ்க்கிராமத்தையுறவினர்கடம்மை
மருவியிடும்பூரணாசௌசராதியரைத்
தரைத்தலத்தினீங்குதலாமினிச்சனனமுதலாத்
தந்திடுமாசௌசநெறிவந்திடுமாறெல்லாம்
நிரைத்தறைவாம்வடநூலைக்கற்றறியமாட்டா
நீணிலத்தோர்க்காசௌசநீங்கும்வகைநினைந்தே.

## சனனம்.

மாதாவினுதரத்தின்வந்திடுமக்கருப்பம்
வளர்திங்கண்மூன்றினிற்றானாலாமாதந்தான்
றீதாகநீங்கிடிற்சிராவ‡மென்றுபெயராந் (ல்
திங்களோரைந்தினிற்றாறினிற்றான்சிதைந்தா

---

* அநதிகாரம்-அதிகாரமின்மை.
† வபனம்-சௌளம்.
‡ சிராவம்-ஒழுகுதல்.

ஒதாநிற்பார்பாத¶மென்றுரைக்கும்பெயரை
யோரேழெட்டொன்பானிலுதித்தலவப்பேரும்
ஈதாகுந்திங்களீரைந்தாதிதன்னின்
மேதினிமேலுதயத்தைச்சுகப்பேருமென்பர். கக

அன்னைதனக்காசௌசஞ்சிராவத்தும்பாத
மானதிலுகீடுதிங்களளவானதினமாம்
பின்னையவப்பேற்றினுக்குஞ்சுகப்பேறுதனக்கும்
பெண்ணாகிறற்பதுநாளாணேன்முப்பதுநாள்
தன்னைநிகர்பிதாவினுக்குச்சிராவத்தும்பாதந்
தன்னினுநானத்தளவேசுத்தியெனச்சாற்றும்
முன்னைமுதன்ஞாதிகட்குப்பாதத்துட்புனலுண்
மூழ்குதலேபுனிதமெனமொழிந்திடுமாகமமே. ()

சொன்னவவப்பிரசவத்திற்றோன்றிமரித்தாலுந்
தோன்றுமுன்னிறந்துலகிற்றோன்றுதல்செய்திடி
மன்னுபிதாவினுக்குளதாமாசௌசமுழுது (இ
மற்றையராஞாதிகட்§குவண்புனன்மூழ்கப்போ
இன்னுமொழிஞாதிகளுக்கிருந்தாற்பூரணமா
மிரட்டைமகவெனினுமதற்கிசைத்தமுறையென்
பொன்னணையுந்தருமபுரஞானசம்பந்தேசன் [றே
பொழிந்திடுமாகமங்களெல்லாமொழிந்திடு மென்
றறியே. (கங)

தோற்றுசுகப்பிரசவத்துப்பிறந்துமரித்தாலுந்
தோன்றுமுன்னிறந்துலகிற்றோன்றுகினுமன்பான்
வேற்றுமையின்ஞாதிகடாமரணாசௌசத்தை
மிகுநானத்தாலொழித்துச்சனனாசௌசத்தைப்
போற்றுலகிற்பூரணமாவநுட்டிக்கக்கடவர்
புகல்சனனாசௌசத்துளொன்றுமரித்தாலும்

¶ பாதம்-விழுதல்.
§ ஞாதிகள்-உறவினர்.

மாற்றுமரணாசௌசமுன்னுரைத்தபடியே
வருஞ்சனனாசௌசமுழுதுமநுட்டிப்பார். (கச)

பேசுமிருபிரசவத்தும்பெண்பிறந்தாற்பிராதா$ப்
பெற்றபிதாவவனுடனேபிறந்தபிதாமைந்தர்
ஆசுதவிர்தந்தைபிதாவவனுடனேசனித்தோ
ரனைவருக்கும்பூரணவாசௌசமாமாணேல்
ஏசுதறீர்சபிண்டரெ†னுமேழுதலைமுறையார்க்
கேறியிடும்பூரணமாவிதன்மேலுமைந்தாய்
நேசமுறுந்தலைமுறையாஞ்சமானோதகர்‡க்கு
நீடுதினமூன்றறிஞாதியர்க்கும்பக்கிணி¶மேல். (கரு)

## பூரணாசௌசசங்கை.

### வேறு.

பூரணவாசௌசமுறைபுகலுங்கானல்ல
ஆரணருக்கையிருநாளரசருக்கீராறுஞ்
சீரணவுமூவைந்துசெட்டிசற்சூத்திரர்க்காம்
ஏரணவுமுழவர்தமக்கிருமூவைந்தாமே. (கசு)

## வருணாச்சிரமம்.

### வேறு.

அறைந்திடுவருணநான்கிலாச்சிரமங்களுங்கு [ங்கள்
உறைந்திடுமவற்றுண்மூன்றையொழித்துறு மாசௌச
நிறைந்திடுங்கிருகிதன்பானின்றவர்பாலுமெய்தி
மறைந்திடும்பந்தமுண்டேல்வருநெறிமேல்வகுப்பாம்.

---

$ பிராதா-சகோதரன்.

† சபிண்டர்-சமானதேகமுடையோர். அவர்
ஏழாந்தலைமுறைவரையினர்.

‡ சமானோதகர்-ஏழாந்தலைமுறையின்மேற்பன்
னிரண்டாந்தலைமுறைவரையினர்.

¶ பக்கிணி-ஒன்றரைநாள்.

ஆயவாச்சிரமநான்குமந்தணர்க்கருகமென்றும்
மேயவாச்சிரமநான்கும்வேந்தர்க்காந்திரேதமாதி
தூயவாச்சிரமஞ்செட்டி துவாபராதிகளிற்சூழ்வான்
பாயவாச்சிரமங்கூடல்பாதசன்*கலியிற்பாங்காம். ()

## சிவாச்சிரமம்.

வேதியராதிநால்வர்விளம்பநுலோமர்மற்றுஞ்
சாதியினின்றுமிக்கசைவநற்பேதஞ்சார்ந்தே
நீதியினபிடேகாந்தநேசமார்குருவாற்பெற்றே
கோதிலாச்சமயிமைந்தன்சாதகன்குரவனாவார். (சகூ)

## சைவபேதம்.

### வேறு.

அரியசதாசிவனென்போனநாதிசைவனவன்பா
லவதரித்தசிவமறையோராதிசைவரிவர்பால்
உரியசிவதீக்கைபெற்றபூசுரர்மாசைவ
ருயர்ந்தவரசன்வணிகனநுசைவராவார்
பெரியகுவளைப்புயத்தோனவாந்தரசைவன்சீர்
பெறுசவன்னனு§தியநுலோமர்பிரவரராம் [ர்
விரியவணிமிசையொழிந்தோரந்தியசைவத்தோ
விரிந்திடுமேழ்சைவவிதமிவையெனநூல்விளம்பும். ()

## புறனடை.

### வேறு.

அண்டர்கடொழுமநாதிசைவனுமரனுக்கன்றி
எண்டருமிருமூவர்க்கத்தெய்திடுஞ்சைவர்க்கெல்லாங்
கொண்டனராசௌசங்கள்கூறருமாகமத்திற்
கண்டனமொழியோர்பாகன்கட்டுரைத்திடுதலாலே.

### வேறு.

ஆதிசைவராதிபிரவரசைவரந்தத்
தாரியராம்புத்திராதிகர்க்குதித்தசாதி

* பாதசன்-சூத்திரன்.

§ சவன்னன்-பிராமணனுக்கு க்ஷத்திரியப்பெண்ணிடத்திற்பிறந்தவன்.

பேதமதற்குரைத்திடுநாட்பெற்றிடுமாசௌசம்
பிரிந்தகனுநித்தியபூசாதியினைத்தாற்
றீதகலத்தொடங்கியநைமித்திககாமியங்கள்
செய்துமுடிவுறுமளவுஞ்சேராதேயகனுங்
காதலுடன்றொடங்காதகாமியத்திற்சுத்தி
கலவாதுநித்தியம்போலென்றுரைப்பர்கற்றோர்

தந்திடுமாகமங்களெல்லாஞ்சாதகர்க்காசௌசஞ்
சத்தியமாஞ்சுத்தி$யெனச்சாற்றியதென்வினைநோய்
சிந்திடச்செய்யுஞ்சிவதர்மிணியர்சதாசிவர்வாழ்
சிவலோகதர்மிணியரென்றிரண்டுவிதருள்
வந்திடுமச்சிவலோகதர்மிணியரிருவர்
மற்றையர்பாகம்புசியார்மாந்துமவரெனவே
முந்துமிருசாதகர்க்குமாசௌசமில்லை
மூன்றுதினமுண்டயலார்பாகமுண்சாதகர்க்கே. ()

## சற்சூத்திரலக்ஷணம்.

அடுத்தமதுவூன்விடுத்*தங்கருந்துணைவியோடு
மம்புவிமேல்வாழுஞ்சற்சூத்திரன்பானுதித்தே
எடுத்தசற்சூத்திரனேன்றீக்கைபெறிலவனை
யெழில்வணிகர்க்கிணையெனவேயியம்புமினிச்சொல்வாங்
தொடுத்தமுதற்சூத்திரனுஞ்சுதனுஞ்சைவத்
துறையிலபிடேகாந்தம்பெற்றிடுவரிவர்க்கு
வடுத்தவிராசௌசதினம்பதினேன்றிரெட்டு
வருநாலைந்தையைந்துமதிக்கசமயாந்தம். (உ௪)

## அவாந்தரசமயவிசேடம்.

சாருமவாந்தரத்திருவர்சமயிகள்பேர்சாற்றிற்
சந்தியோபாஸ்திபரர்¶சிவகன்மரதரா‡ந்

$ சத்தியச்சுத்தி-உடன்சுத்தி.
* மதுவூண்விடுத்தெனவும்பாடம்.
¶ உபாஸ்திபரர்-வழிபாட்டிற்பற்றுடையவர்.
¶ உபாஸ்தி-வழிபாடு. ‡ ரதர்-விருப்பமுடையவர்.

தேருமிவரிற்சந்திபரணியல்புதன்னைச்
செப்பிடிலோர்சந்திமுறைவழுவாதுசெயலாம்
ஆருமிவன்றனக்ககமுன்னறைந்தனங்கேண்மற்றை
யவனியல்பாலயமதுபுக்கலகுமெழுக்கிடுதல்
பாரும்விசும்பும்வியப்பப்பண்பாடலாதி
பகர்ந்தவிவர்க்காசௌசமிருபதுநாளென்பர். (உரு)

## பஞ்சாசாரியர்.

வேறு.

நாடுசீர்ப்பரதனொடுநற்குழலூதவல்லோன்
பாடுவோன்முழவுகொட்டும்பரிசினனினியவீணை
நீடுசீருறவாசிப்போனிகழ்த்திடுமிவரன்றேமால்
சாடுசீர்மிக்கபஞ்சாசாரியரென்னுந்தக்கோர். (உசு)

## உருத்திரகணிகைமுதலெழுவர்.

உருத்திரகணிகையாதியெழுவர்பேரோதுங்காலை
அருந்தியருதவுந்தெத்தையரும்பொருட்கிரீதைச்சிவன்
இருத்திடவெண்ணியெய்தும்பிருதையன்பேறுபத்தை
திருந்தியவிருதையோடுதிகழலங்காரதாசி. (உள)

என்றுகன்னியர்களாதியெழுவகைப்பெயருஞ்சொன்
னோம், நன்றிவர்வந்தவாறுநவிற்றுவமடைவினாலே
அன்றுதாருகவனத்திலரனருட்பார்வையாற்சூல்
ஒன்றுபன்னியர்பால்வந்தாருருத்திரகணிகைமார்கள்.

வேறு.

வீறுயர்புண்ணியவசத்தாற்புண்ணியர்தாம்பெற்ற
மிக்கபுகழ்ப்பெண்கடமில்விடையவனாலயத்தில்
ஆறுவருஞ்சடாடவியாயடியர்குறைதீர
வளித்தருளென்றேயளிக்கப்பட்டவளாந்தெத்தை

கூறுவறுமையரிடத்துக்கொளப்பட்டுவந்த
கொள்கையினுள்கிரீதையெனக்கூறுவர்களுடலந்
தேறவருஞ்சீவனகாரணம்வேண்டித்தனித்துந் [தை.
திரட்சியொடுஞ்சேர்ந்துசின்னம்பொறித்த வளாம்பிரு

தனதுபேரன்பினொடுமுத்திதனைவேண்டிச்
சங்கரன்றனகத்தடிமைத்தவத்தொழிலினொருமை
மனதுடையளாகியடைந்தடையாளமடைந்தே
வரிசையொடும்வண்மைபெற்றுவாழ்பவளாம்பத்தை
கனதுரகமன்னரிடுங்கலகாதியவற்றாற்
கட்டுடைந்துவிட்டேறியன்னியதேயத்தோன்
எனதுபொருளென்னவடைந்தனளாயேமீள
விலணடைந்தாளிருதையெனவியம்பிடுவருணர்ந்தோர்

வேறு.

ஆடனற்கீதம்பாடலவைகள்செய்விக்கக்கற்று
நீடணியாடைபூண்டுநிறையழகுடையளாகி
நாடகசாலைநின்றுநரபதியுதவவேவல்
கூடணங்கினரோடொன்றுற்குறியலங்காரதாசி. (௬௯)

வேறு.

வேண்டிடுமுற்பவங்கடமின்விளைந்திடும்புண்ணிய
த்தான் மேவியநானாவன்னவிதங்களிலேநின்றும்
பூண்டிடுநானாவிதத்தாலகத்தடிமையாகப்
பொருந்துமுருத்திரகணிகையாதியெழுவருக்குந்
தாண்டிடுஞ்சீர்நடம்பயிற்றுவோன்முதலாம்பஞ்சா
சாரியரென்றாகமத்திற்சாற்றுமவர்தமக்கும்
மீண்டிடுமாசௌசதினமீரைந்தோடைந்தா
மினும்பதின்மூன்றீரேழிருபதும்பெண்வழிக்காம்.

உம்பர்பிரானாலயத்துக்குரியவகைமாத
ரோர்மனையிற்றனித்தனிவீடுற்றுறைந்தாலொருவர்க்
கிம்பர்வருமாசௌசமெல்லார்க்குமில்லை
யிதிற்கொண்டுகொடுத்திருந்தோர்க்கேறகம்பூரணமாம்

அம்புலனுமாகாதுதொட்டிடினுமுழுக
வாலயத்திற்பணிவேண்டிலன்னியர்பாற்கன்னி
நம்பரனுக்கெனவாங்கிநாட்டிடுதற்கிலேயே
னங்கள்பிரான்கோயிலுளார்ஈயந்தெளிகவன்றே. (௫௫)

மித்தையெனவுலகமயல்விடுத்தகுலாசாரம்
விரும்புமுருத்திரகணிகையாதியருக்கீந்த
தெத்தையவளிருவகைக்குஞ்செயல்வேண்டுமகந்தான்
செயுங்காலேயேற்றவடன்றினந்தானேயாகும்
ஒத்தகுலத்தாரிழிந்தாருயர்குலத்தாரேனு
முதவுபிதிருடன்பிறந்தவுத்தமர்கட்கெல்லாந்
தத்தைபொருந்தெத்தையெனச்சாற்றுமிவளிறந்தாற்
றத்தமதுபூரணவாசௌசமெனச்சாற்றும். (௫௪)

# திராவிடகாயகன். *

வேறு.

நாயகன்பரிதிநல்கநல்லகண்ணிடந்துசாத்தும் [மை
மாயவன்கோயின்மேவும்வனிதையர்தமக்கும்வண்
ஆயசீர்ப்பஞ்சாசாரிமார்கட்குமகழுவைந்தாய்
மேயநாளளவாமென்றுவிதித்தனர்விதிவல்லோரே. ()

தாவிலாகமத்திற்கூறுந்தமிழ்க்கீதந்தன்னையன்பின்
நாவினாற்பாடவல்லநலந்தருந்தவசியென்போன்
மேவியவீசம்யாதேயாயினும்விரும்பானுகி
ஆவியாமன்னைமைந்தனுதலானகழுவைந்தாம். (௫௬)

# அநுலோமர்.

வேறு.

அரசகுலமாதிகளினந்தணன்றுன்வேட்டே
யடுத்தமனேவியரிடத்திற்கிடைத்தனரேற்புதல்வர்

---

* திராவிடகாயகன்-தமிழ்வேதபாராயணஞ்
செய்வோன்.

உரனுறுமாசௌசமுறையாறுமூன்றோர்நா
ளுறுமைந்தருடன்பெண்டீரிறந்தாலுமொக்கும்
வரனுதவும்பிதாமரணம்வந்தக்கான்மகார்க்கு
வரன்முறையேகாதசமீராறுபதின்மூன்றுந்
தரணிமகிழ்மனைவியர்க்குந்தாய்க்குஞ்சேய்க்குஞ்¶
சாற்றியிடினொக்குமவர்தாய்குலவாசௌசம். (௩எ)

வேந்தர்குலாதியர்படைத்தகன்னிமாரை
விதிமணத்தாற்பொருந்தாதுவேட்டபிராமணன்றன்
ஆந்தனுவீழ்மரணமுற்றாலவன்மனைவிமார்க
ளடைந்தமுறையிரண்டுமூன்றுனதினநான்கு
காந்தன்மரபாசௌசங்கடந்திடவேசெய்க
கட்டரசற்கிழிந்தகுலப்பாரியர்தாமுறையே
போந்ததினமீரேழுமூவைந்துபுரிக
புகல்வணிகற்கீரோன்பான்றினமிழிந்தாள்புரிக. ()

## தாசர் தூதப்பார்ப்பான்

கைக்கோளன்முதலினோர்.

வேறு.

மறையவர்முதலோர்யார்க்கும்
வழுவிலாத்தொழும்பரானோர்க்
கறையுமச்சுவாமிமாருக்
கடைந்தவாசௌசநாளாங்
குறைதருந்தூதப்பார்ப்பா
னகம்பதின்மூன்றிற்கொள்வான்
முறைதருகைக்கோளன்கோ
பாலற்குமுப்பானென்பர். (௩௯)

---

¶ தாய்க்குஞ் சேய்க்கும்-தாய்மரணத்திலும் சேய்மரணத்திலும்.

வேறு.

நன்றாமிழைச்சாலியற்குநற்பட்டாரியற்கு
நாடுமகமுப்பதின்மேறுலுநாளென்பர்
பன்னுமெழிற்சிற்பனொடுபகர்கும்பகாரன்
பற்றிடுமாசௌசதினம்பயின்முப்பத்தைந்தாம்
மன்னுமுளிசைப்பாணனிலவாணிகனொடெண்ணெய்
வாணிகன்வண்ணானிவர்க்குமுப்பதின்மேலாறும்
என்னுமிழிவாம்பிரதிலோமர்வகையெல்லா
மெஞ்ஞான்றுமாசௌசமென்றுரைக்குநூலே. ()

## சனனாதிக்கிரமமும், *சுமரணத்தில் ஆண்மரணமும்.

பிறந்திடுமாசௌசதினம்பிறகிடினுங்கேட்ட
பிதாவினுக்காசௌசந்தான்பெரும்புனலாடப்போம்
அறந்தருஞ்சீர்ஞாதிகளுக்கறல்புகலும்வேண்டா
மாண்மரிக்கினுமகரணத்துணையுநாளுஞ்
சிறந்திடுமானியமேகந்தெந்தமுதிப்பளவுந்
திரிதினஞ்சூடாகருமத்தளவுமின்னுமதிகம்
நிறந்தருஞ்சீருபநயனநிகழ்வரைபூரணமே
னிலவிடுமிங்கதிகமென்றுகுறித்தவகைசொல்வாம்.

சொன்னவுபநயனமுடிவளவுமைந்தாறென்பான்
றுகளறுமீராறுதினம்வேதியராதியர்க்காம்
பன்னியதோருபநயனமென்பதுதான்மவுஞ்சி
பந்தனமேவிற்பிடித்தல்பகர்நிறைகோறாக்கன்
மன்னியசீருபயநவவத்திரதாரணந்தான்
வகுத்திடுமிந்நான்குமுறைமறையவராதியர்க்காம்
முன்னியசீர்நாமகரணாதியனைத்தினுக்கு
மொழிந்திடுவாங்காலவிசமாகமத்தின்முறையே. ()

---

* அதிக்கிரமம்—எல்லைகடத்தல்.

## நாமகரணுதிகளுக்குக்

### காலநியமம்.

ராறீரெட்டிருபானெண்ணுன்குாளா
மெனுமிவைகணுமகரணத்திஞக்குமுறையே
ஓராறுதிங்களின்மேனுறுந்தந்தோற்பவமே
ஆறுஞ்சூடாகன்மந்தானுதித்தநாட்டொடங்கிச்
சிராரும்வருடமூன்றுனதிலந்தணர்க்காந்
திகழ்வேந்தர்தமக்கைந்தாம்வருடஞ்சீரகத்தின்
றாருமார்பினர்க்கேழாம்வருடஞ்சதுர்த்தர்
தமக்குநவம்பதிஞென்றும்வருடமெனச்சாற்றுப். ( )

ஆனசனனங்கருப்பந்தொட்டடைவைந்தெட்டி
லந்தணர்க்காமவுஞ்சிவிரதங்கருப்பந்தொடங்கி
சனமிலாப்பதிஞென்றிற்றனுவிரதமரசர்க்
கீராறில்வணிகர்தமக்கெழிினிறைகோல்விரதம்
மானமிகுஞ்சூத்திரருச்குபயநவவாடை
மகிழ்விரதமீரெட்டாம்வருடத்திலாகும்
ஊனமுறுமாசௌசமதிகநூனங்க
ளுருதுரைத்தகாலத்திற்கன்மந்தப்பிடினும். (௪௪)

### சுமரணத்திற்பெண்மரணம்.

பெண்ணிறந்தான்ஞாதிகட்குப்பெரும்புனன்மூழ்கப்
போம்பிறங்கிடுசௌளத்தளவும்பேசிடுநாளொன்றே
பண்ணிறைந்தமொழிக்கெட்டாம்வயதளவுமூன்றும்
பரிப்பளவுமங்கலியம்பத்தாவின்கையிற்
பண்ணிறைந்தபுனல்வார்த்துத்தரியாமங்கலிக்குத்
தன்ஞாதிக்குங்கணவன்ஞாதிக்குமூன்றுங்
கண்ணிறைந்தபிதாமாதாக்கணவன்றாய்தந்தை
கருதிருதாயாதியர்க்குங்கிளாகம்பூரணமாம் (௪௫)

## விசேடம்.

பரித்தவனதாசௌசம்பாரிக்குமுளதாம்
பாலன்பாலகிநாமகரணம்பண்ணுமுன்
மரித்திடினொருதரத்திற்பிறந்தவர்கட்கெல்லா
மருவுமகந்திரிதினம்பின்மரித்திடிற்பூரணமாந்
தரித்தவருண்மேனியிடுஞ்சபிண்டராமேழு
தலைமுறையோர்தமக்குமேற்றலைமுறையைந்தாக
விரித்தசமானோதகர்க்குவிரும்பிடுநாளொன்றே
விளம்புசபிண்டருக்குமூன்றென்றவிடயத்தில். (௬௬)

சொன்னசமானோதகர்க்குச்சொல்லுதுங்கேளின்னுந்
தொடர்ந்தசபிண்டருக்கொருநாளென்றவிடயத்தில்
அன்னசமானோதகருக்கறன்மூழ்கத்தீரு
மறைந்தவிதியானவெல்லாமனைவருக்குமொக்கும்
நன்னலஞ்சேருபநயனம்பண்ணுமுன்சேய்மரித்து
நண்ணியிடுமாசௌசங்கழிந்தபின்னர்க்கேட்ட
தன்னவராஞ்சபிண்டருக்குச்சத்தியச்சுத்தியதாந்
தந்தைமுதலோர்க்குமேற்சாற்றுதுமங்கறியே. (௬௭)

சிறந்ததிருமங்கலியந்தரித்தசிறுவாலை
தந்தமுளைத்திடுமுன்னமரித்தகனனத்தில்
அறந்தருநற்சபிண்டருக்குநானத்தாற்சுத்தி
யாகுந்தந்தோற்பவந்தானனதன்பின்புரியும்
மறந்தருஞ்சீர்க்கனனதகனத்துநாளொன்றே
மருவிடுமாசௌசவகையாருருமடைவே
புறந்தருபூரணத்தினொடுமுத்தினம்பக்கிணியே
பொருந்தேகதினங்காலநானமெனப்புகல்வார் (௬௮)

## திரிதினம்.

குரவனுக்குஞ்சீடனுக்குநல்லாசானென்றே
கொண்டவற்குமாசௌசநாளோர்மூன்றுரும்

உரவரியமங்கலநாண்பரித்தவடான்மரித்தாற்
பயந்திடுதாய்தந்தைபிறரகம்புகுந்தபுதல்வி
விரவருள்கூர்மகள்புதல்வனுடன்பிறந்தாள்பிள்ளை
மெய்த்துணைவனுடன்பிறந்தமின்னனையாள்பிள்ளை
உரவவனிபுகழுமிந்தவாறுவகையோர்க்கு
முடனிருந்தாலாசௌசமொருமூன்றுநாளே. (௪௯)

பேசுபுகழாண்மரித்தாற்பெற்றதாய்தன்னைப்
பெற்றதாய்தந்தையத்தாயுடன்பிறந்தான்பிறந்தாள்
மாசுதவிர்மகளவள்சேய்பெண்கொடுத்தமாமன்
மன்னுசகோதரிமைந்தரெண்மருக்கும்வகுக்கில்
ஆசுதருமாசௌசமென்றுரைக்குமதுதா
னகலாதுமூன்றுதினமடைந்திருந்தாலவரைத்
தேசுலகமதுநீங்கியிருந்தனரேலவர்க்குச்
செப்பிடுவாமாசௌசஞ்சேரும்வகைவேறே. (௫0)

## பக்கிணி.

மூத்தினவாசௌசிகளையுரைத்தனம்பெண்மரண முய
ங்கிடத்திற்பக்கிணியாசௌசர்தொகைமொழிவாம்
புத்தியுடனிரண்டுதலைமுறைமேலுறவு பொருந்துச
மானோதகர்மெய்பொன்றினளைப்பெற்ற
பத்தியராந்தந்தைதாயெனும்பாட்டன்பாட்டி
பகர்மாற்றுந்தாய்தந்தைமாற்றுந்தாய்மைந்தன்
எத்திசையும்புகழ்தந்தையுடன்பிறந்தோன்மனையா
ளியம்புமிவர்மகண்மகன்சீர்மருமகளோடின்னும் ()

அன்புதருநன்மாமன்மாமியிவர்பெற்ற
வரும்புதல்வன்புதல்விமருமகளாகுமைவர்
நன்புதவிரன்னையுடன்பிறந்ததாயவட்குச்
சொல்லவருமகளோடுமைந்தன்மருமகணீ
டன்புதருநால்வர்பிதாவுடன்பிறந்தாளவள்சே
யினிபமகன்மருமகள்சேரிந்நால்வரன்றி

நண்புவிமேற்றன்னுடனேபிறந்தாள்செய்புதல்வி
நவிலுமருமகளென்னுநால்வர்களுநிப்பால். (ருஉ)

சொற்றவிவரன்றியினுஞ்சொல்லுதுங்கேளிறந்த
தோகையுடன்பிறந்தவன்மற்றவன்மனையாளிவர்கள்
பெற்றமகண்மகனருள்கூர்மருமகளோரைவர் [சேய்
பேர்பெறுமாற்றுட்டிமகண்மகன்பெற்றாண்மகள்
குற்றமில்சீர்மகளுடனேமருமகளவ்வகையாற்
கூறிமுப்பத்தொன்பான்றொகைசேருமிவரை
அற்றமில்சீர்ப்பக்கிணியாசௌசரெனவறிக
வப்பாலுமாண்மரணத்தகமெடுத்துச்சொல்வாம். ()

## ஏகதினம்.

பொற்புறுபெண்மரணத்தின்முப்பத்தொன்பானுப் புக
ன்றதொகையோர்கடமிற்சபிண்டரெனப்பொருந்தும்
நற்புவியெண்ணுன்மூன்றுவகையோரைவிடுத்து
நவிலிருபத்தோடெழுவர்பக்கிணியாசௌசர்
அற்புறுமாண்மரணத்திலுரைத்தவிவரகத்து
ளறியாதவிடங்கேட்கிலேகதினராவார்
தற்பரனுங்குருவருளைப்பெற்றசகோதரராந்
தனிவிரத்தன்கிருகியிவர்தாமுமவர்க்கிணையோர். ()

## சத்தியச்சுத்தி. *

ஞானமதாற்சுத்திவருமுறவினரைச்சொல்லி
னல்லபிதாவினுக்கத்தைநன்மாமனுடனே
ஈனமிலாப்பெரியதாயெனுமிவர்கள்பிள்ளை
யீன்றதாய்நன்மாமனல்லத்தைசிற்றாய்
ஆனவிவர்பிள்ளைகளுஞ்சத்தியச்சுத்தியரா
மறன்மேற்கும்போதுடுத்தவாடையெலாங்கூட

* சத்தியச்சுத்தி-உடன்சுத்தி = ஸ்நானத்தா
லாகுஞ்சுத்தி.

:ரணமிகவகன்றபெருந்தடாகமுதலடைந்து
வண்புனலிலாடிடப்போமாசௌசமாசே. (௫௫)

## ஏககாலம்.

கொண்டவளைமைத்துனனுமவன்மகனுங்கூடப்
பிறந்தானைக்கொண்டவனுமுடன்பிறந்தான்மகளை
ண்டருளாற்கைப்பிடித்தமருமகனுமுதர
பேதத்தின்மருமகனுந்தோழன்முதலோருங்
கண்டவருக்குலைந்திறந்தானனமதாற்சுசியாங்
காலவகத்தினர்களைமேற்காட்டுதுமீண்டுரைத்த
வெண்டருமுத்தினரேகம்பக்கிணியோர்கால
மெழினைத்தினுமரணவகமெவர்க்குமொக்கும். ( )

## பக்கிணியிலக்கணம்.

வேறு.

எடுத்தவொருபக்கிணியினிலக்கணந்தானிரண்டாம்
அடுத்தவிராவிரண்டினடுவானதொருபகலும்
நடுத்தனிலோரிரவுமயனண்ணுபகலிரண்டுந்
தொடுத்தவிலையாமெனவேயாகமநூல்சொல்லும். ()

## துன்மிருதன்.

வேறு.

தீக்கையுடையோர்க்காகாப்பசுகன்மமான
தீர்த்தயாத்திரைதேசாந்தரந்துறந்துதிரிதல்
ஆக்கையினைமலைக்குவட்டைவிதித்தாதிதன்னை
யடைந்துவிழலழல்வீழ்தலன்றதியொறுத்தல்
காக்கையிரையெனக்கருதுமுடல்வெறுத்தலொழியா
க் கயரோவுகுட்டரோயாதிகளாற்டெரியோர்
யாக்கையெண்ணிப்பரிகாரத்துடன்குவடாதிகளின்
மரித்தனர்க்காசௌசமில்லைநானத்தான்மாறும். ()

## பதிதன்.

பண்ணவரும்பாவியெனும்பதிதனவனிறந்தாற்
பகர்ந்திடுமாசௌசமில்லைநானத்தாற்சுத்தி
எண்ணவருமந்த்யேட்டிமந்திரத்தாற்றகன
மிலையத்திபெறுக்கலுமேயிலையெமனென்றிரங்கிக்
கண்ணவருமழுகைமுதலானவெலாமில்லை
கருதுபிண்டோதகக்கிரியைதானுமவற்கில்லை
அண்ணவருஞ்சிராத்தாதிகன்மமுமங்கில்லை
அவனுக்குச்சரியவனேயரும்பாவத்தாலே. (௫௬)

## பிரமசாரி.

வேறு.

மொழிதருபிரமசாரிமுடிந்திடினகந்தான்முற்றும்
பொழிதருந்தந்தையாதிபூரணாசௌசர்க்கெல்லாம்
வழிதருமினத்துளோர்க்கும்வகுத்திடுமந்தவாறே
செழிதருபிரமசாரிசெப்பினோர்க்ககமுழ்கப்போம். ௬௰

## வானப்பிரத்தன், சந்நியாசி,

சைவாசாரியன், சாதகன்.

பாரியுடன்வனந்துறைவோன்பரமயதிசைவ
ஆரியனற்சாதகனுமிவைவரையுங்குறித்து
நாரியலுங்கிருகியெனநண்ணினற்காசௌசந்
தேரினிலையென்றறையுஞ்சிவாகமங்டெரிந்தே. (௬௧)

## தொடங்கியகருமம்.

வேறு.

தொடுத்திடுதானம்யாகம்வதுவையிகல்வேந்தர்
சோரரால்வருதேகபீடையினுபத்தின்
அடுத்திடுமாசௌசமிலையன்றியின்னுந்தொடங்கி
யாசரிக்குங்காமியமாவிரதங்டுத்தேகம்

விடுத்திடுமாசௌசமுதல்விரவியடைந்தாலும்
வேண்டிடுந்தானம்பூசைவிடுத்துவிரதத்தை
மடுத்திடுமென்பாற்சிறிதும்வழுவாமல்விழைந்து
வருமுறையின்முடித்திடுகமன்னுவரம்பெறவே. ௬௨

## நோயாளனுக்குச்சுத்தி.

காய்ந்தபுனலுங்குளியாக்கடும்பிணியன்றனக்குக்
கருதுபயவாசௌசங்கலந்தேனுமடைந்தால்
வாய்ந்தநகர்க்குப்புறமாய்மருவுபுனற்கரையில்
வைத்தவனைப்பிணியிலான்வந்துவந்துதொட்டே
எய்ந்தபுனலீரைங்காற்றோய்ந்திடிலாசௌச
மென்பதந்தப்பிணியாளனிடத்திலும்போமதனாற்
சாய்ந்தவகமுடையவனுய்த்தனதுநியமாதி
தந்திடலாம்புனிதமுறுந்தன்மனையிற்சார்ந்தே. (௬௩)

## மகாகன்மாதியின்முயன்றோன்முதலினோர்.

நீடுமகாகன்மத்தைத்தொடங்கினோன்றனக்கு
நிகழ்கன்னியாதானந்தொடங்கினோன்றனக்குந்
தேடுபுகழ்த்தேவனுற்சவம்ப்ரதிட்டைதொடுத்த
தேசிகற்குஞ்செய்விக்கும்யசமானன்றனக்குங்
கூடுபரிசாரகற்குஞ்சாந்திராயணாதி
சோதில்விரதந்தொடங்கிகொண்டவற்குமோமம்
நீடுபெறத்தொடங்கினற்குஞ்சிராத்தகன்மம்வேதப்
பெரியபராயணமாதிதொடுத்தியற்றுமவற்கும் (௬௪)

தீர்த்தயாத்திரைதொடங்கிச்சேறலுற்றோன்றனக்குஞ்
சேர்ந்தனவேலாசௌசஞ்சத்தியச்சுத்தியதாம்
போர்த்தலத்தின்முற்காயத்திறந்தவனைக்குறித்துப்
பொருவில்பிதாமுதலோர்க்குஞ்சத்தியச்சுத்தியதாம்

பேர்த்தவனுக்குத்தகனமாதிகளுமுடனே
பிறங்கிடவேசெய்திடுகதுன்மரணம்போலப்
பார்த்திடுமக்கடன்காலாந்தரங்களிலேபண்ணப்
படுவதல்லவாகமநூல்பகர்ந்தமுறையாலே. (கரு)

முடிசூடுமென்னவனுஞ்சிவபத்தனுகி
மூத்தமதிமந்திரியுமெஞ்ஞான்றுஞ்சுத்தர்
படிமீதிலாசௌசமில்லையவர்தமக்குப்
பகர்ந்திடுநித்தியகன்மந்தொடங்கிமுடிவதன்முன்
கொடிதாயவகஞ்செய்வோர்க்கெய்திடினுமிலவாங்
கொண்டகிருச்சிரமாதியகத்தினுள்ளேமுடிந்தால்
நெடிதானவாசௌசநின்றதினத்தளவே
நீங்கினபின்றெசௌசம்விரதமுடிந்தக்கால். (கசு)

## துன்மரணம்.

கூறியிடுமதிக்கிரமாசௌசம்போன்மாதங்
குறித்துரியமுத்தினவாசௌசமுதற்கொள்க
சீறியிடுந்துன்மரணமிருவகையாமறிந்து
செய்திடுதலறியாதுசெய்திடுதலிவற்றுள்
எறியிடுமுந்தினதுட்சபிண்டர்க்குச்சுத்தி
யெய்தியிடுமானத்தாலிம்மரணத்தோனை
மாறியிடுமர்திரத்தாற்சூத்திரன்போற்சுடுக
வகுத்தகாலாந்தரத்திற்றருப்பைகட்டித்தகிக்க. கஎ

கதியுறவேமர்திரத்தாற்செய்திடுங்காற்சபிண்ட
கணங்களுக்குமுத்தினவாசௌசமெனக்கழறும்
மதிமறந்துசெய்திடுந்துன்மரணத்தின்ஞாதி
வருக்கத்தோர்க்கன்றுமுதற்பூரணவாசௌசம்
விதிவழுவாதிம்மரணமேவினேன்றனக்கு
வேண்டிடுமுத்தரசன்மம்விதிப்படியேபுரிக
துதிமருவுஞ்சுகமரணமடைந்தவன்போலெண்ணித்
தொல்புவியோர்க்காகமநூல்சொற்றமுறையாலே.

துன்மரணகாரணந்தான் சொல்லிடுங்காலிடியிற்
றுணிந்துபுறப்படலரவின்மேல்விழுதல்சுவர்வீழ்
முன்மதித்துவீழ்ந்திடல்வெந்தீயினிடைவீழ்தன்
மூனையுள்ளவாயுதத்தின்மலைமரத்தின்வீழ்தல்
வன்மனத்தால்விடம்பருகலாதிகளாமிவற்றான்
மரித்தவனுக்கிருமூன்றுமாதத்தினுதல்
பின்மருவோர்வருடத்தினுதறருப்பையினாற்
பிடித்துருவஞ்சுகமரணம்போற்றகனமியற்றே. சுகூ

கன்மநலமருவினபுன்காரணத்தால்வன்னி
கடியவிடமாதிகளாற்காத்திரத்தைவிடுக்குந்
துன்மரணமடைந்தானுகியமத்தைவிடுத்தோன்
சொல்லவருங்கோளனொடுமூர்க்கன்பொய்வேடன்
நன்மரணம்பெற்றானுமிருதிறத்தோரானு
நண்ணுமகஞ்சபிண்டருக்குநானத்தாற்சுசியாம்
மின்மருவுமக்கினிதான்மெய்முழுதும்பற்றி
வெந்துருகிமசானத்தில்வெண்பலியாமளவில். (எ0)

## ஆசௌசித்திரவியம்.

ஆசௌசமாசௌசியரும்பொருட்குமெய்து
மவன்றனக்குச்சுத்திவருங்காலதற்குமடையும்
தேசுரும்புரோட்சணத்தாற்றிகழ்சனனமரணஞ்
சேருமுனமறிந்தறிவாற்சிறப்பாகப்பிரித்தே
மாசுரும்வினையொழியநல்லவறங்குறித்து [லாம்
வைத்தபொருளதன்முன்னும்வரைந்தபொருட்கெல்
லசுருமாசௌசமில்லையிவைதம்மா
லெழிற்றானஞ்சிவபூசையாதிகள்செய்விப்பான். ( )

அகமருவுமுனம்பிரியாவரும்பொருட்கடமினு
மாசௌசஞ்சிலபொருளுக்கில்லையென்பரவைகேள்
மிகமருவுதானியம்பொன்பசுநிரைகளாடு
வெல்லநறுநெய்யொடுபால்வெண்டயிரெட்கரும்..

தகமருவுபசுங்கறிதண்ணீருப்புவிறகு
தயிலமவுடதம்புழுங்கற்றண்டுலமெள்ளன்னம்
மிகமருவுமிவையெல்லாமாகுமிவைதம்மை
யெல்லார்க்கும்வாங்கலுமாமென்றிடுமாகமமே. எஉ

## சனனகாலம்.

எந்ததிதாவொருவனுக்குச்சனித்திடுங்காலத்திற்
றந்தைதாய்முதலோர்க்குஞ்சார்ந்தபொருடலக்கும்
அந்தவேளையினுபிராளமரியளவுமா
சௌசமிலைதேவர்பிதிர்களடைதலினாற்
சிந்தவிளைசிந்தைமகிழ்வொடுதானஞ்செயலாந்
திகழ்சொன்னம்பூமிபசுக்குதிரைகுடையாடு
வந்தநவவத்திரம்பூப்படுக்கையன்னதானம்
வளந்தருகேத்திரமுதலும்வாங்கலுஞானியர்க்காம்.

## ஆபத்து.

வேறு.

அந்தணராதிநால்வரநுலோமர்முதலெல்லோருந்
தந்தமதாசௌசத்துஞ்சமயாசௌசத்துநிற்கும்
அந்தநல்வேளைதன்னிலாபத்துவந்ததாகில்
எந்தநற்கருமமேனுமிசைந்தனசெயலாமன்றே. (எச)

## கிராமம்.

வேறு.

ஓர்தெருவினீராறுகோற்றரையினுள்ளே
யுற்றசவமெடுப்பளவும்பெற்றிடுமாசௌசஞ்
சீர்தருநற்சிவபூசையாதிசெயாதொழிக
செப்பியதுபோனபின்னர்ச்செய்திடுகவனைத்தும்
போர்தருநீழ்விற்பதினொர்கிடைப்புறமாம்வீதிப்
புடையதனிற்கிடந்தாலுமற்றயல்வீதிக்கண்
ஏர்தருமாரணமோதல்சிவபூசையோம
மிவைமுதலானவைகளெல்லாமியற்றிடலாமென்பர்

வேறு.

பெரியநற்கிராமத்துள்ளேபிணங்கிடந்தாலுஞ்செய்தற்
குரியசீர்ச்சிரௌத†வன்னியென்பதையுவப்பாற்செய்
புரியரன்பூசைசெய்யும்போதிலாசௌசம்வந்தால் [க
அரியமந்திரங்களின்றியக்குறைப்பூசைசெய்க. (எசு)

வேறு.

ஓங்குமெழிற்சீடர்குழுவேதியர்களுறையு
மூரதனைக்கிராமமெனவுரைத்திடுவர்படிமேற்
றேங்குபுகழ்ச்சூத்திரர்தார்திரண்டிருக்குமூர்க்குச்
செப்பிடுவர்கேட்கப்பேர்திகழிரண்டினுடன்றை
ஆங்குளவூரதற்குப்பேர்குடிகமெனவறைவ
ரடுதொழிலுற்சேனைகளாலரசசேவகராற்
பாங்குபெறநிறைந்தரசனரண்மனையினோடும்
பயின்றபுரந்தனையிராசதானியெனப்பகர்வர். (எஎ)

தூரதீவாந்தரத்தினின்றும்வந்து
தொல்புவிமேற்கொண்டுவிற்கயோக்கியமாயிருக்கும்
பாரதிரவியங்களினனிறைந்துசமுத்திரத்தின்
பாங்கணைந்தபட்டணத்தைப்பத்தனமென்றுரைப்ப
ஏரணையுமிவ்விரண்டுமினைர்தநடுவெல்லை [ர்
யெய்திநின்றவூரதனைக்கருவடமென்றிசைப்பர்
சீரணையுங்குடிகம்பத்தனமிராசதானி
செப்புகருவடநான்குங்கிராமவகஞ்*சேரா. (எஅ)

## ஆசௌசாரம்பகாலம்.

அக்கினிகோத்திரம்‡பெறுஞ்சீரந்தணராதியருக்
கரியதகளந்தொடங்கியாசௌசதினமாம்

---

†சிரௌதம்-வேதத்தில்விதிக்கப்பட்டது.
*கிராமவகம்-கிராமாசௌசம்.
‡அக்கினிகோத்திரம்-தீவேட்டல்

திக்கபுகழ்க்கினிகோத்திரமில்லார்தமக்கு
விழுமரணநாண்முதலாவிதித்தனராசௌசம்
புக்கவிராத்திரிகாலமாதலலருதயம்
பொருந்துமுனமாதன்மின்னூர்பூப்பதுகண்டாலு.
தக்கசனனமரணஞ்சாரிலுமத்திவசந்
நான்முதலாவெண்ணிடுகவாசௌசந்தனையே. ௭௯

## ஆசௌசமத்தியாசௌசம்.

வந்தசனனந்தன்னிற்சனனமடைந்திடினுஞ்
சாற்றியிடுமரணத்தின்மரணம்வந்துறினும்
ஊர்ந்ததனோடேகியிடுமரணத்திற்சனன
முயங்கிடினுமம்முறையாஞ்சனனமதின்மரணம்
வந்தணையிற்போகாதாசௌசாந்ததினத்தின்
வருங்காலைப்போதி¶னின்வேறுசௌசம்வந்தால்
இந்தவடைவேயிரண்டுமூன்றுநாளதிக
மெண்ணியநுட்டித்திடுகவிசைந்தவசந்தனையே. ௮௦

## விசேடம்.

பெருத்தமரணாசௌசந்தனிலற்பமரணம்
பிறந்தாலும்பெரியசனனாசௌசமதனில்
இருந்தவருஞ்சிறியபவாசௌச*மடைந்திடினு
மேகியிடும்பெரியதனோடென்றறைவரிடர்தாம்
பொருத்தவருமதிகமதாற்குறைந்ததுபோமதிகம்
போகாதுகுறைந்ததனாலென்றுபுகன்றிடுவர்
வருத்தமற்றசபிண்டர்தமக்காசௌசமகன்றால்
வந்திடுமாசௌசமதைவகுத்துரைக்கலுற்றாம். (௮௧)

---

¶ ஆசௌசாந்ததினத்தினும், காலைப்போதினும்
* பவாசௌசம்-சனனாசௌசம்.

## அதிக்கிராந்தாசௌசம்.†

கேட்டறிந்தாலாசௌசத்துள்ளவற்றுளடங்குங்
கிளர்மாதமூன்றினுள்ளேன்மூன்றுதினங்கிளக்கும்
வாட்டமிலாவிருமூன்றுமாதத்துளாகில்
வந்திடும்பக்கிணியென்னவகுத்திடுவரதன்மே
லொட்டவருமொருதினமாமொருவருடத்துள்ளே
நண்ணியிடுநானத்தாலழிந்திடுமேலெல்லாந்
தேட்டமிகுஞ்சபிண்டரெனுங்கூட்டத்தார்க்கெல்லாஞ்
செப்பிடுமிவ்விதிமுழுதும்பொதுவெனவேதெளியே

ஏகதினவாசௌசர்க்காசௌசங்கடந்தா
லேகியிடுமாசௌசநானத்தாலென்பர்.
சோகமுறும்பக்கிணியாசௌசர்க்கோர்காலஞ்¶
சொல்லவரும்பூரணவாசௌசத்துட்கேட்டாற்
றுகமுறுமகங்கடந்துகேட்டனரேனுனத்
தாலொழியுந்திரிதினவாசௌசருக்காசௌசப்
போகிடிலோர்தினமென்றேமங்கையொருபாகன்
புகன்றிடுமாகமமெல்லாம்புகலுமெனவறியே. (அரு)

வருந்தவருமத்திசஞ்சயனத்தின்முன்னே
மகிழ்தந்தைதாயுடனேமாற்றாந்தாயிவரைப்
பொருந்தவருமரணமிவைகேட்டுமனஞ்சோரும்
புத்திரனுக்காசௌசம்புகல்குறைநாளளவாம்
அருந்தவனாமேலத்திசஞ்சயனத்தின்மேலே
யாகும்வருடத்துள்ளேயறைமூவர்மரணம்
இருந்தவிடத்தேகேட்டாற்பூரணவாசௌச
மெழிற்றகன‡முடிந்திடினுமுடிவுறுவிடினும். (அச)

---

† அதிக்கிராந்தாசௌசம்-எல்லைகடந்தஆசௌசம்.
¶ ஓர்காலம்-ஒருபொழுது = முப்பதுநாழிகை.
‡ எழிற்றகனம்-என்றது அந்தியேட்டியை.

பின்னையுங்கேள்வருடத்தின்மேற்கிரியைபண்ணாப்
பிதாமாதாமரணமவைகேட்டிடிற்பூரணமாந்
தன்னையுறுமாற்றாந்தாய்தனக்குமூன்றுகுந்
தந்திடுமுத்தரகன்மத்தினராகியிருக்கும்
அன்னைபிதாவானவர்க்குமுத்தினவாசௌச
மாமென்பரதுமுடிந்தமாற்றாந்தாய்தனக்குப்
பொன்னனையவளம்படைத்தபூதலத்தின்மீதே
போற்றியிடுமாசௌசமொருநாளாம்புகலில். (௮௩)

## நித்தியகருமம்.

உத்தரநற்கிரியைபெற்றவுயர்மாதாப்பிதாவோ
டுதரபேதத்தாயினோன்மரணஞ்சொல்வோன்
சத்தமதால்வருடத்தின்மேலறிந்தமைந்தன்
றனக்கடைவேமூன்றுதினமேகதினமகமாஞ்
சத்தமதாஞ்சனனமரணசௌசந்தன்னிற்
சந்திவந்தனமுதலநயந்துசெயலாகுஞ்
சித்தமகிழத்தானஞ்செயல்வாங்கலோத
றேவனருச்சனைவைச்சுவகன்மமுதலாகா. (௮௪)

சமயிமுதலாசௌசஞ்சாற்றுதுங்கேள்சமயி
தனைமுதலாயினர்மரணந்தனிலடைவேயொருநாள்
அமையுமிருதினமூன்றுதினநான்கிலோத
லாகாதுசனனமரணசௌசமிவற்றில்
உமையவள்கோன்பூசைகுருபூசைசிவாக்கினியி (௮௫)
லோமமிவைவிடவொண்ணாவொண்சிவமந்திரத்தா
லெமைதவிர்க்குநானமதுசெயச்சுத்தனவன்
மேவியிடாதாசௌசம்விரைக்கமலப்புனல்போல்.

மன்னுசிவதீக்கையினோன்மலமூன்றும்விடுத்து
மருவுசரீரத்துடனே வைகுதலாலிவனை

..ன்னுசிவன் குருவன்னி பூசாந்தத்தகந்தா
னுற்றிடலாற் காமியகன் மம்புரிதலொன்று
தன்னுடையசோகத்தாற் சிவபூசைதன்னைச்
சாற்றுமொரு காலமுத னற்காலவரைதான்
..ன்னுமன்பாற் செய்திலனேற் பரிகாரங்கொள்க
பண்ணிலனேற்கொடுநிரயப் பரப்பினிடைப்படுவன்.

..ண்ணியநற் சிவபூசைபுரியாமற் புசித்தோன்
புழுப்புசித்தோனுமந்தான் செய்யாதுபுசித்தோன்
மண்ணினிடை மலம்புசித்தோ னைந்தெழுத்துமுதலா
மந்திரங்கள்செபியாமன் மறந்தேனுங் குடித்தோன்
..ண்ணியவாமூத்திரமுஞ் சுக்கிலமுங் குடித்தோன்
றனுவனவன்றனக்குத் தந்திடுவோன்பின்னர்
..ண்ணியதீவிடம்புசிப்போ னுதலினனியம
நழுவாமற் செய்திடுவா னுபத்துவரினும் (அக)

..ழுவாமற் சிவபூசை முதனியமமுடிப்போன்
ஞாலமதிற் றேல்பொதிந்த நடலிங்கமூர்த்தி
..ழுவாஞ்சைப் பத்திவயி ராக்கியஞானத்தி [ம்
னேதேனுமொன்றுடையோ னெழிற்பூசையிரண்டு
வழுவாமற் செய்திடுக மற்றையவன்றானு
மானதபூசனைபுரிக மனத்தெவையுமதித்துச்
செழுவாரிகூடாமற் றிருநீற்றையணிந்து
சிவபூசைவாகிய † த்துஞ்செய்யும்வகைசொல்வாம்

ஓதியிடுந் தனதாசான் றனைக்கொண்டேயாத
லொத்தவனைக் கொண்டாத லுடையவரைப்பூசை
நீதியுடன்செய்வித்துச் சிவபூசைமுடிவி
னின்[illegible]னைசமுடனினைந்தே
ஆதிதனைத்[illegible]திரமுன்றேற்புட்ப
வஞ்[illegible]யாக்கிடுகமுக்காற்

† [illegible]றம்.

நீதியலுமாசௌசந் தீர்ந்ததற்பின்றானே
செய்திடுகசிவபூசைவாகியத்தும்முறையால். (கூக)

செப்புசிவதீக்கைபெற்ற புத்திரனென்பவன்றான்
றிடபத்தி படைத்தாலு மாசௌசந்தன்னில்
இப்புவியிற் பரார்த்தலிங்கபூசைசெய்வானல்ல
னியாவருக்கு நித்தியநல் விரதம்விடலாகா
அப்புவியி னுனம்பண்ணி யநுட்டிக்கக்கடவ
ரரியநிருவாணத்தை யடைந்தசுயம்பாகி *
ஒப்புயர்வில் பரார்த்தலிங்கபூசைபுரிந் திடலா
முலோகாசா ரப்பொருட்டா லொழிந்திடலுமாகும்.

இயம்புமிவன் றன்சனனமரணத்துஞ் செயலா
மெழிற்செபம்ப்ரதக்கிணமாதிகளெல்லாமியல்பான்
நயம்புணரு நாற்குலமு மரனாலயத்தி
னல்லபஞ்சா வரணத்தி னண்ணிடலாமதனுள்
வயம்புணரு மாத்தானமண்டப ‡ த்துப்புகலாம்
மன்னுசிவ தீக்கையுள மறைக்குலமுன் மூன்றும்
புயம்புணருங் குவளைத்தாரோனதனுட்புகுந்தாற்
புனிதமுறக்கவ்வியத்தாற்புரோட்சித்தல்வேண்டும்.

## ஆசௌசிபரிசத்திரவியம்.

வேறு.

தோற்றிடுஞ் சூதகத்தோன் மரணசௌசத்தினுள்ளோ
சாற்றிடுமிவர்கடொட்டதண்ணறுமலர்பாண்டாதி [ன்
போற்றிடல்விடுகவீசன் பூசனைக்கேறிற்றாயின்
ஆற்றிடுமகோரத்தானூறுயிரமோமஞ்செய்க. (கூஉ)

---

* சுயம்பாகி - தன்கையாற்சமைத்துண்போன்.

‡ ஆத்தானமண்டபம் - சபாமண்டபம்.

## உருத்திராக்ஷம்.

### வேறு.

பவமரணவகந்தனிலுஞ் சலமலமோசிக்கப்
படும்போதும்மகளிர்பயோதரம்புணர்வேளையினும்
அவமருவுமற்றையவா சௌசமுறும்போது
மக்கவடந் தொட்டுடலி னணிதல்விதியன்றாம்
உவமையிலா வக்கவட மக்காலத்தணிந்தா
லோங்கிடுமா யுக்குறையும் மந்திரத்தாற்செவியிற்
சிவனையருச்சனைபுரியுங் கரங்கடமிலணிந்த
சீர்மணிக்குத் தோடமில்லை செறிவடங்களாகா. ()

## பூப்பு.

பூப்பவடான் முப்பதாநாளன்றிமுந்திப்
பூத்திடினு நாலைந்திற்புகுமகமுத்தினமாம்
நீப்பவடான் முந்தினநாட் சண்டாளியாவ
ணிகமுமிரண்டாநாளிற் பிரமவதைதன்னைக்
காப்பவணி தனிற்புரிந்தா ளாகுவண்மூன்றாநாட்
கலைகளொலிக்குநீல வண்ணாத்தியாவள்
நாப்பகர்நீர்க்கலங்களினிற் றீண்டிடன் முத்தினமு
நாணுதியின்றியொரோர் பகற்போதினருந்தல். (சுசு)

வார்த்திடுநீர்கைகூட்டிக் குடித்திடனீள்கடைகால்
வழங்குபுனற் பருகிடுதன் முறையாநாலாநாட்
சீர்த்தமண்ணாற் பல்விளக்கிச் சங்கவகாலத்திற்
செழும்புனன்மூழ் கிக்கிருதங் கவ்வியந்தானருந்தி
கூர்த்தபவித்திரையாகிப் புறப்பூசை புரிவாள்
கூறியமுற்றினமூன்று முட்பூசை முடிப்பாள்
பார்த்தரனை யுட்பூசைபண்ணிலவேலகோரம்
பரிவினொடு மாயிரந்தான் செபித்திடுதல்பண்பாம்

வேறு.

பூசுரர்மகளிராதி பூத்தபோதினைத்திற் றம்மிற்
காசுறத் தொட்டபாவங் கழியுமூன் றுபவாசத்தாற் [ட
பேசுவர்தமின்முற்பேதைபின்னரைத்தமித்துத்தொட்
டாசுகுங் கிருச்சிரந்தானரைமுக்காலொன்றினாற்றுல்.

அரசனன்மகளிராதி யந்தணவணங்கைத்தொட்டால்
விரவகசீங்கவெண்ணிவிரும்புககிருச்சிரந்தான்
உரனூறுகாலரைக்கா லுதவிய நானஞ்செய்தான்
முரணூறுமனமாற்றுட்டி மாரெனமொழிவோரோடும்.

வேறு.

சாதிகோத் திரமேகந் தந்திமிம் மாதுந்
தமிலறிந்து மறியாதுந் தொடினுனத்தொழியும்
ஓதியவம்மாதர்களிற் சிவபூசையுடையோர்க்
குண்டுசெப மறியாமை யானறிவாற்றொட்டால்
ஆதியகோரம்முறையி லைஞ்ஞூறுயிரமா
மையுறவுவரினூற்றெட்டறைந்திடுகவகோரம்
மேதினியிலொருசாதிப்பின்னகோத்திரத்தர்
விளம்பிடுவாமினிப் பின்னசாதிக்கும்வேறே. (௧00)

பார்ப்பனியஞ்ஞானத்தா லரசர்மகளாதிப்
பாவையரைப்பரிசித்தாற்றம்மிலிருமடங்கோ
டேர்ப்பனவாமும்மடங்கு நான்மடங்கம்முறையே
யியம்பிடுகவறிந்துதொட்டாலிசைத்தவற்றிலிரட்டி
நிர்ப்பரவைசூழுலகிலேலையருமிந்த
நெறிமுறையேசெபித்திடுக சந்தேகந்தனக்குஞ்
சேர்ப்படவே யொன்றுக்கொன்றேற்றபடி செபித்துச்
சிவபூசை முதலான நியமங்கள்செய்க. (௧0௧)

## அறியாமையினிலக்கணம்.

அனாதுவங்கேளறியாமை யென்பதன்றன்சொரூப
மனுகியிடுந்தைவிகத்தா னிணைந்திடுமோகத்தாற்

சிறைமருவுவியாதியினு லிராசபயந்தன்னாற்
றெறுஞ்சோர ரச்சமிவை யாதிகளாற்சிறந்த
பொறைமருவு முறையறிவு பிறழ்தலறியாமை [ல்வர்
புகன்றவிவை யொழிந்தவெல்லா மறிவெனவேபுக
கறைமருவும் பூப்பதனைக் கலந்தவடான் றெட்ட
கழிபுனலைத்திண்டினர்க்கு நானமதாற்சுத்தி. (௧0௨)

## ஆசௌசநானம்.

இறந்தவகம் பிறந்தவகம்பூத்தவகமுடிவி
னெய்திடுஞ்சங்கவகாலந் தனினானஞ்செய்தே
சிறந்திடுஞ்சுத் தாசமனஞ்செயச்சுத்தியாகுஞ்
செழுமறையோர்க் கரசருக்கு மக்காலந்தன்னில்
அறந்தருநீர்டிந்தூர்தியாதிதொடப்புனித்
மறலாடிநிறைகோலுந் தொடவணிகர்க்ககம்போம்
மறந்தவிருஞ் சூத்திரர்க்கு வண்புனலின்மூழ்கி
மன்னியசீர்த் தண்டுதொடவருந்தூய்மையன்றே.()

கோடல்சிவதீக்கையுடன்பத்திமுதற்பெற்றோர்
கிளரகநானந்நிசியூண்கிளத்துமகோரத்திற்
பீடலகோராயிரநல்லுருச்செபத்தோடோமம்
பேசுமீ ரைந்தினுக் கொன்றிவைக ளொல்லாம்
சாடியிடுமாசௌசமுடிவதனிற்புரிக
நவில்பத்திஞானவயிராக்கியமாதிகளிற்
கூடியிடுமொன்றேனுமின்மையினுன்முன்னைக்
கொண்டசிவபூசைசெயாப்புத்திரராதியர்தாம். ௧0௪

முடிந்திடுமாசௌசமதிற்றிரிகாலநான
முப்பொழுதுஞ்சிவபூசையாயிரமாமகோரம்
அடிந்திடுநெய்யாலோமமகிழ்வுடனேபுரிந்து
வருகிசியிற்குளச்செந்நெல்வழங்கன்னம்புசிக்க
பொடிந்திடுமெய்மரணவகம்போற்றகனந்தானும்
புரிந்தவனந்நியனேனும்பூரணமாய்ப்பிடிக்கும்

கடிந்திடுமம்மரணவகந்தனிற்கொடிதல்வகந்தான்
கழிமரணவாசௌசத்துடன்கழியாதென்பர். (௧0௫)

## தகனம்.

தந்தைமுதலோர்க்குள்ளசனனாசௌசத்திற்
றனிரட்டிமரணாசௌசமதினும்பூத்த
பைந்தொடியாராசௌசமிரட்டியதனிரட்டி
பயந்தவனுக்குள்ளசனனாசௌசமதினும்
நிந்தைதருந்தகனாசௌசம்மிரட்டியாகு
நேயமுறுந்தாதைதகனந்தவிரவொழிந்தோர்
அந்தமுறுந்தகனவகந்தகனாசௌசத்தோ
டகலுமந்தத்தகனவகந்தானுமிரண்டாகும். (௧0௬)

முந்தினதாஞ்சரீரதகன மென்புமுதலான
முடிந்தவனதாகமெனவகுத்தெரியின்முடித்தல்
பிந்தினதாமுந்தினதிற்பிறங்குசபிண்டருக்குப்
பேசுமகநூன*மிலைபெருந்துயரமதனாற்
புந்திநையுங்கயங்குட்டம்வகுரிமுதலேயாற்
பூபதியாற்சோரராற்றுட்டமிருகத்தாற்
றந்திபினாற்பன்னகத்தாற்சலத்தாலக்கினியாற்
றன்றிரும்பியோடவுறும்பிற்காயமுதலால். (௧0௭)

## புநர்த்தகனம்.

ஆவியுடல்விடுத்தலெனுந்துன்மரணந்தன்னா
லடைந்தகளேபரங்கடமைப்புதைத்திடுகவன்றி
மேவியிடுமமந்திரத்தாற்றகித்திடலும்விதியாம்
விளம்பினர்க்குச்சண்மாதந்தான்வருடந்தானீள்
பூவிலகன்றதன்பின்னரென்பினாதல்
பூம்பலாசிலையினடிக்காம்பினாதல்
மாவினாற்றருப்பையினாற்கோமயத்தானாதல்
வடிவமைத்துத்தகனாதிமந்திரத்தாற்புரிக. (௧0௮)

---

* நூனம்-குறைவு.

இவ்வண்ணந்துன்மரணத்தெய்தினர்கடம்மி
னெழிற்றீக்கையுடையோர்க்குமுத்திவிழைந்தோர்
மைவண்ணப்பைசாசபுத்தியினுநீங்க [க்கும்
மதித்திலக்கமகோரமுருத்திரபலியும்வழங்கிச்
செவ்வண்ணமாவிரதர்தாம்பாசுபதர்தாஞ்
செப்புமிவராதியர்தாமெண்மரைப்பூசித்தே
யுய்வண்ணமமுதுசெய்வித்தாடைமுதலியன்ற
வுதவியனுப்பியபின்மூழ்கிக்குசையாதிகளான். ௧0௯

அன்பினெடும்பண்ணவருமவ்வுருவந்தன்னை
யருமந்தகவ்வியத்தாலருஞ்சுத்திபுரிந்த
பின்புரியவந்த்யேட்டிகன்மத்தாலுயிரைப்
பெறற்கரியசிவபதத்தில்யோசித்துப்பின்னர்த்
துன்பகலத்தகனமதுபுரிந்திடுகவிதியாற்
சொல்லவருமவரென்பாற்செயும்போதங்கதனை
நன்புவியெண்ணான்பாலாற்புனிதமுறமுழுதீ
நனைத்தியற்றன்முறைமையெனநவின்றிடுமாகமமே. ௧௧0

அன்னியதேசாந்தரம்போயீராறுவருட
மளவுமீண்டணையாமலகன்றோர்கடம்மைத்
துன்னினர்கண்டோங்கேட்டோ மெனுமுரைகடானுஞ்
சொலப்பெறுதேவிட்டாலதற்குமேலவர்க்கு
வன்னமுறுந்தருப்பையினல்வடிவியற்றித்தகன
மந்திரத்தால்விதிப்படியேமதித்தவர்க்குச்செய்க
பன்னியிடும்பாரியுளளேலவளுக்கின்னும்
பகர்ந்திடுவாமாகமத்திற்பகர்ந்தவிதியெல்லாம். ௧௧௧

இம்முறைதேசாந்தரம்போயிவையியற்றப்பட்டோர்
கேந்திழையுண்டேற்கைமையாக்கவிவன்வந்தால்
அம்முறைசேரமங்கலியையுத்தரியத்துடனே
யன்புறுசெம்பொற்றாலிமங்கலநாண்டரிக்க

விம்முலகில்வெள்ளியொடுவியாழன்செவ்வாயு
மேவுதிரிபதையென்னுங்கார்த்திகைநற்புனர்தம்
மைம்முகில்வானுத்தரஞ்சேர்விசாகமுத்தராட
மருவிடுபூரட்டாதியெனுமிவைகடமினும். (௧௧௨.

பத்திரையாந்துதியையொடுசத்தமியீராறுப்
பகர்திதிபின்மரணந்தான்றகனந்தான்வந்து
புத்தியுடன்மந்திரத்தாற்கிரியைமுடித்தோர்க்கும்
புகலுமகந்தனிலுதகம்புரியாதோர்தமக்குஞ்
சித்திரமார்தருப்பைமுதலானவையால்வடிவஞ்
செய்துதகனம்புரிகசெப்பிடுமித்தகனம்
அத்திவலோயுலகுதனிலிரண்டுவகையாகு
மாசௌசத்துள்வரலப்பால்வருதலெனவே. (௧௧௩

சொற்றவற்றின்முந்தினதுமுந்தினதோடேகுஞ்
சொல்லவருமெல்லோர்க்குமிரண்டாவதிரண்டாம்
நற்றரையெண்ணக்கினிகோத்திரமுடையோன்றகன
நவிலுமழலில்லாதான்றகனமெனவறிக
உற்றமுதற்றகனத்திற்பூரணமாமிரண்டா
முறுந்தகனத்தொருமூன்றுசபிண்டர்க்காமென்பர்
அற்றமில்லாவத்திதகனத்துமுன்றௌச
மநுட்டித்தான்முத்தினமாமலதகம்பூரணமாம். ௧௧௪

## சுவானுகமனம்†

மீளவுந்தான்றகனமெனவிதித்தவிடமெல்லா
மேவுமகம்பூரணமாம்புத்திராதியர்க்கு
நீளவணியுறவினருமில்லாருஞ்சவத்தி
னேயமுடன்பின்சென்றானையழற்பரிசம்
மாளழல்சேர்நெய்குடித்தன்மீண்டுபெறலாடன்
மன்னுபிராணாயாமமிவைகளினற்புனிதந்

---

† சுவானுகமனம்—சவத்தின்பின்போதல்.

நாரவிந்தத்தொடையோன்‡சூத்திரப்புன்சவத்தைத் தயையினொடும்பின்சென்றான்முத்தினவாசௌசம். (௧௧ரு)

ப்பிணத்தைமன்னவனும்வணிகனும்பின்சென்று லகமிருநாளுளதாகுமணைந்திடுமூவருக்குஞ் செப்பிடுங்காயத்திரியையாயிரத்தெட்டுருக்கள் செபித்திடலானுந்தியினிடைமூழ்கலானும் ப்பிலதாஞ்சுத்திவரும்பிராமணனற்சவத்தை யுறுமன்பாற்சூத்திரன்பின்சென்றக்காலனந் தப்பிலரசன்றானும்வணிகனும்பின்சென்றாற் சலநானந்தமுறுடனெய்யுணலிவற்றாஞ்சுத்தி. ௧௧௬

நமறையோனரசனொடுவணிகனிவர்சவத்தை யன்பினொடுபின்சென்றாலடைவுதனிலகந்தான் ருவியிடுமொருதினத்தினிருதினத்தினளவும் வசனபேதங்களினால்வந்தணையுமின்னு தி நிலத்தில்வணிகர்சவமென்பதைப்பின்சென்று வெய்தியிடும்பக்கிணியுமாசௌசமுடிவிற் பொருவில்காயத்திரிநூற்றெட்டுருவினாலும் புரிந்திடுநானத்தாலும்புனிதமறையோர்க்காம். (

## சவஞ்சுமத்தல்.

ரசனொடுவணிகனிவரடுத்திடுஞ்சூத்திரர்த மாவிவிடுங்குணபமதையருளோடும்பின்சென்றால் ரையதனிற்பக்கிணியுமோர்தினமுமாகு [ற் டன்பாற்சூத்திரன்சூத் திரப்பிணத்தைத்தொட்டா ரையதனிற்பின்சென்றாலாசௌசமொருநாட் டானலதோர்காலமுமாஞ்சவமதனைச்சுமந்தால்

---

‡ அரவிந்தத்தொடையோன்-பிராமணன்.

உரைசெயுஞ்சோதகராமுத்தினவாசௌசத்தோர்க்
குற்றிடும்பூரணவகந்தானென்றுரைப்பருயர்ந்தோர்.

ஓங்குலகினுபநயனந்தரியாதசிறார்தம்
முயிர்விடுத்தகளேபரத்தையுவப்புடனேசென்று
தாங்குதலேமுறையேழாஞ்சபிண்டருக்குமகந்தான்
சாற்றியிடிற்பூரணமாந்தாய்வழிப்பெந்துக்கள்
பாங்குபெறப்பொறுத்தனரேற்பகரகமுத்தினமாம்
பயிலுமயற்சாதியர்க்குஞ்சவசாதிக்குளவாம்
நீங்குசம்பந்தத்தினராயொத்தசாதியர்தா
நிகழ்த்துபிணஞ்சுமந்தனரேலொருகாலமகமாம். (

ஒருகாலவரையறைதான்கதிருதயந்தொடங்கி
யுடுவுதிக்குமளவேனுமுடுவுதித்தறொடங்கிப்
பெருஞாயிறுதிக்குமளவேனுமெனநவில்வர்
பேசிடுபோதளவுநகர்ப்புறத்திருந்துமூழ்கி
வருதீதிலக்கினியைப்பரிசித்துப்புனிதம்
வழங்குபஞ்சகவ்வியந்தான்கிருதந்தான்குடித்துத்
தருதூய்மையுடையராய்வருதல்வரன்முறையாந் [ம்.
தருங்கூலிப்பிணஞ்சுமந்தோர் தமக்குமகமுரைப்பா

தகுதியுளசபிண்டரினுமிரட்டியதாமகந்தான்
சாற்றுமயலாரொத்தசாதியர்தாஞ்சுமந்தாற்
றொகுதியதாஞ்சவசாதிக்குள்ளவகமுளதாந்
துறந்தயதீச்சுரர்தம்மையநாதர்தமைச்சுமந்தான்
மிகுதியதாஞ்சத்தியச்சுத்தியதாகும்பலமு
மிகவுளதாமவர்தமக்கும்விளம்புசம்ஸ்காரப்
பகுதிசெய்தான்முன்னதிலும்பலமதிகமாகும்
பகர்ந்திடுவாஞ்சைவசமயத்தோர்க்கும்பாங்கால். ()

சுத்தசைவர்தாங்குணபம்விழைந்துசுமந்தாலுந்
தொட்டுத்தகித்தாலுமகோரமிருநாறுரைக்க

இத்தலத்திற்சுத்தியதாஞ்சாதகன்போதகனே
டெழிற்புதல்வனிவர்களைத்தாங்கிடினபனநானஞ்
சித்தமகிழ்சங்கிதாமந்திரநூற்றுருவைச் [ம்
செபித்துப்பின்பூசைசெய்கசவங்களின்பின்செல்லு
அந்தவர்க்குத்தூய்மையதாமகோரநூற்றுருவா
லதுசுமந்தோன்றகித்திடுவோனந்யேட்டியாசான்.

இந்தமூவர்க்குமகோரம்மிருநூற்றுலே
யெழிற்புனிதந்தீக்கையுடையோரைமறையோனை
அந்தவிரதமுமுடையோன்விரதமிலான்சுமந்தா
லவமிருத்துப்போந்தீக்கையுள்ளோனில்லாதான்
பந்தமுறுகளேபரத்தைப்பின்செல்லேற்சென்றூற்
பகர்நானந்தன்சாதிசிவமனுநூற்றுற்போம்
நந்தலுறுதீக்கையில்லாச்சபிண்டர்களென்போர்தா
னற்றீக்கையுடையோரைத்தொடக்கடவரல்லர். ( )

நல்லசிவதீக்கையுள்ளோரில்லாதசவத்தை
* நயப்பினொடுபரிசிக்கக்கடவரல்லர்தொட்டாற்
சொல்லருநானம்புரிந்தூர்ப்புறந்தனிலோர்காலத்
துணையிருத்தலொடுகனலைத்தொடல்கிருதங்குடித்த
வல்லரெனச்சங்கிதாமனுவிருநூறுரைத்தல் [ல்
வருமந்தத்தினமுண்டிமறுத்தலினுற்றெழியும்
இல்லமுறுமெண்ணைதலைக்கிட்டுக்கொண்டே
யிப்புவியினரரென்புதொட்டாலங்ககோரம். (கஎ)

## அழுதல்.

நவையிலொருநூறுருவானற்சுத்தியாகு
நவிலெண்ணெயிடாதுநரரென்புதனைத்தொட்டாற்
சுவைதருநீர்நானத்தாற்சுத்தியாமலது
சூரியநற்றரிசனத்தோடாசமிக்கச்சுசியாகு

சவைமகிழுஞ்சூத்திரன் சூத்திரசவத்தைத்தொட்டுத்
தானமூதாலொருநாளாசௌசமவற்கின்னும்
அவைதனிற்போய்ப்பரிசியாதமூதாற்சஞ்சயன
மாவதன்முன்னொருகாலம்பின்னனத்தகனும். ௧௨௫

தனுவரசன்வணிகனிவர்சாதியினுள்ளத்தி
சஞ்சயனமுன்னமூகைதான்வந்தாற்றரித்துத்
துனுமெழில்சேரொண்டுகில்களெனப்படுவவெல்லாந்
தோயவுடன்மூழ்கியிடச்சுத்தியதாம்பின்னர்
உனுமமூகையுற்றனரேனனமதாற்புனித
முறுமறையோர்தஞ்சாதிக்குள்ளத்திபெறுக்கல்
எனுமுரியகிரியையின்முன்னமூகையுறினன
மிதற்குமேலாசமனமியற்றிடச்சுத்தியதாம். (௧௨௬)

சதுர்மறையோர்துதிவேந்தர்வணிகரெனுமிவர்தஞ்
சாதியிலேதாழ்ந்தவனுக்குயர்ந்தவரைக்குறித்துக்
கதுமெனவேயமூகைவரிலத்திபெறுக்காமுன்
கலந்தவகநானத்தாற்கழியுமதற்கப்பான்
முதுமறைசொலாசமனஞ்செயச்சுத்தியாகு
மூதுலகிலுயர்ந்தோர்க்குத்தாழ்ந்தோனைக்கருதி
மதுமலர்க்கண்கலங்கவரினென்புபெறுக்காமுன்
மருவுமகமொருநாளாமதற்குமேனனம். (௧௨௭)

போரரசன்வணிகனிவர்சூத்திரன்றன்பொருட்டாற்
புமூங்கியமூதாலத்திசஞ்சயனம்புரிமுன்
சாரகந்தானிருதினமாமதன்மேலோர்தினமாந்
தழல்வளர்ப்போர்பாதசனைச்சாலநினைந்தன்பாற்
பாரதனிலத்திபெறுக்காமுனங்கண்கலுழ்ந்தாற்
பகரகமுத்தினமாமப்பாலகந்தானொருநாள்
ஆரவொண்ணுவாசௌசியன்னந்தான்புசித்தார்க்
கடைவுதனின்மேவியிடுமாசௌசமுரைப்பாம். (

## ஆசௌசி அன்னம்புசித்தல்.

அகமுடையோனன்னத்துமாசௌசமுறலா
லதுபுசித்தோன்றனக்குமுறுமகமுமிருவகையாஞ்
சகமதனிலறிந்ததென்றுமறியாததென்றுஞ்
சாற்றுமிதின்முந்தியதுபோந்தந்தவனுளுடனே
மிகமருவுநானத்தால்வற்கடையாதிகளின்
விழைந்துண்டநாளளவாய்மேவுமறியானேற்
சுகமருவச்செரித்துவிழுமளவுமகமருவுஞ்
சொலுமிவர்க்குப்பரிகாரவிதியினையுஞ்சொல்வாம்.

ஐயிருநாளாவின்பாலருந்தியதன்பின்ன
ரரியசாந்திராயணநோன்பநுட்டிக்கவலது
துய்யவகோரந்தனிலோராயிரநல்லுருவைச்
சுத்திபெறச்செபித்திடலுமாகுநெடுங்கடல்சூழ்
வையமிசைமகிழ்ந்துசெயுமிருதுமணத்தயினி
மகிழ்ந்துசெயும்புஞ்சவனஞ்சீமந்தத்தடிசில்
எய்துமிவைபுசித்தாலுமுன்னுரைத்தபடியே
யியற்றிடுகபரிகாரமின்னமும்வேறிசைப்பாம். ௧௫௦

நாமகரணதினத்துநற்சேயைக்கோயி
னண்ணுவிக்குநாடனினுமூட்டுதிவசத்துங்
காமமிகுசௌளத்தும்விரதத்துநன்மை
காட்டுகோதானத்தும்விவாகத்தும்புசித்தாற்
றுமிருந்துநூறுநூறகோரவுருச்செபிக்கத்
தாஞ்சுசியாஞ்சூத்திரப்போனகந்தன்னைப்புசித்தாற்
போமந்தவாசௌசஞ்சேர்பெறுநல்லகோர
புண்ணியநன்மந்திரமோராயிரத்தைப்புகன்றல்.( )

சொல்லுமெழிற்பார்வேந்தர்தம்விரதம்புவியெண்
சோமயாகந்தனிற்போய்ப்புசித்தக்காலகோரம்

நல்லுருநூறன்பின்றுநவின்றிடச்சுத்தியதாம்
நண்ணுயிரைவலியவிடுமவன்சிராத்தத்திற்
புல்லுமொருவருடத்தினுள்ளாகப்புசித்தாற்
போற்றவருதக்கிணமாமகோரமனுத்தன்னை
ஒல்லுமயுத‡ஞ்செபிக்கவவனேகோத்திட்டத்
தொருபதினுயிரங்குறையாதேசெபிக்கவொழியும்.()

செப்புநவச்சிராத்தநக்கினமுடனேயேகோத்
திட்டசிராத்தஞ்சபிண்டீகரணத்திற்புசித்தோர்
ஒப்புரையிலகோரமனுவாயிரநன்மரணத் [ர்
தொவ்வொன்றுக்காய்ச்செபிக்கபத்தாநாட்புசித்தோ
இப்புவியிற்பன்னிரண்டாநாளதனிற்புசித்தோ
ரெனுமிவர்கண்முந்நூறுமுந்நூறுசெபிக்க
அப்புனிதசிவச்சிராத்தங்களிலேபுசித்தோர்க்
கானபவித்திரந்தானுஞ்சிறப்புமிகவுளதாம். (கஙரு)

## ஆசௌசிசம்பந்தம்.

சொன்னசிராத்தங்களிலேசென்றுசொன்றியயின்றே
சோறுசெரித்தொழிந்ததன்பின்னுனமிகப்புரிந்து [ர்
முன்னறைந்தவிதிப்படியேபரிகாரமியற்றி
முக்கணன்றன்பூசையினைமுயன்றுசெயக்கடவர்
இன்னபடிபுரிந்திலரேலெய்துமகம்போகா
தென்றிசைப்பரினிச்சம்பந்தாசௌசமிசைப்பாம்
அன்னவகத்தினர்களுடனணைந்திருத்தல்படுத்த
லவர்கணத்திலிருந்தருந்தன்முதலவாயினவாம். கஙசு

எத்துணைநாளிணங்கினர்களத்துணைநாளளவு
மேறியிடுமாசௌசமுறவயலாரேனும்
ஒத்துறையுஞ்சம்பந்தாசவுசமுற்றோர்தமக்கே [லே
யொழிந்துமடவார்பொருளோடொண்கிரியைக்கில்

‡ அயுதம்-பதினுயிரம்.

அத்துயராசௌசிபொருளரன்பூசையாதிக்
கணையினபனஞ்சாந்தியோமாதிபுரிந்து
முத்துறழ்சுத்தான்னநறுநெய்பணிலமுதல்
முழங்கநிவேதனம்பண்ணிப்பரிகாரமுடிப்பான். ()

றதித்தமரணாசௌசர்தம்மையகமுள்ள
மற்றையர்தீண்டற்கசனணசௌசந்தனினும்
உதித்தநாண்முதனான்குநாளளவுமொண்ணு [ல்
தொல்லிடுமாசௌசர்தமையொல்லாதார்தொட்டா
விதித்தநானத்தினால்மிகப்புனிதமாகும்
வேறுமாசௌசிதனையாசௌசிதொட்டாற்
புதித்தகிருச்சிரமதனையநுட்டிக்கச்சுசியாந்
தொட்டிடுமாசௌசவிதமெடுத்தின்னுஞ்சொல்வாம்

அம்புவிமேற்களேபரத்தைத்தொட்டவர்கள்சுமந்தோ
ரணைந்தமரணாசௌசர்நின்றுபிணந்தகித்தோர்
கொம்புறழுமிருது மின்னாராமிவரைத்தொட்டோர்
குளிர்புனலுண்முக்கான்முக்காணனஞ்செயப்போந்
தம்பரிவால்மகப்பெற்றாடனைப்பார்த்தல்பேச
லாறுகாதொருபதுநாளென்பருயர்தக்கோர்
பம்புதிரவியங்கடனையாசௌசிதொட்டாற்
பச்சையில்லாப்பொருளனைத்தும்விடப்படுவதாமே.

ஆர்ந்திடுமாசௌசிதொட்டவயினிபுசித்தாலு
மருவருக்குமயிர்கிருமியணைந்திடுமென்றதி
டீர்ந்திடுமாதரவினாலருந்திடினும்பலாநற்
குசையத்திசங்கபுட்பமனைகூவிளாதி
சேர்ந்திடுபத்திரந்துவைத்துச்சாறருந்தச்சுசியாஞ்
செறிந்தசனணசௌசமரணசௌசத்தின்
ஈர்ந்திடுகேசம்வபனங்கொள்ளாமலிருந்தான்
மருவுமகரீங்காதாதலினாற்கொண்டிடுவார். (கரு௮)

## வபனம்.

வாய்ந்தசனனாசௌசமுடிவிலருட்டந்தை
வபனந்தான்கொண்டிடுகமரணாசௌசத்தில்
ஏய்ந்தமைந்தர்ஞாதியரிலிளையோர்கள்வபன
மிறந்தநாட்சார்ந்தனர்க்குமேலெங்குங்கொள்க
தேய்ந்தவகமுடிவிலவரெல்லாரும்வபனஞ்
செய்வித்துக்கொள்கசருவாங்கமுநற்கருப்பந்
தோய்ந்தமனையாள்கணவன்றனக்குரிமையாகச் [பா*
சொன்னவிதியானவெல்லாந் துலங்கவெடுத்துரை

சொற்றிடுமக்கருப்பவான்சவம்பின்சேறல்
சொன்னவபனங்கோடலுறுகடனீராடல்
உற்றிடுகைநகங்களைதல்சிராத்தத்திற்புசித்த
லுயர்வாஸ்துகரண*மதிதூரத்துச்செல்கை
பற்றிடுகல்யாணஞ்செய்திடலிவைகளாதி
பண்ணிடலாகாசெய்தாற்பாலகனுயுப்போம்
பெற்றிடுதந்தையின்றீக்கைதனின்ஞாதிவபனம்
பெறலாகாவிருபாரியரிலொருத்திபெற்றால். (கசo)

பிறந்தசேய்தனைக்குறித்துப்பிதாவபனங்கொள்ளேல்
பெறுநாமகரணாதிக்கிரியைகள்செய்திடலாஞ்
சிறந்ததாய்தந்தைக்குரவன்மாமன்றமையன் [ன்
றேசிகனற்பெண்கொடுத்தோனிவர்கள்மனைவியர்க
ளிறந்ததினந்தனிற்கருப்பமுடையவனேயெனினு
மெண்ணும்வபனக்கிரியையெய்தியிடக்கடவன்
அறந்தருந்தாய்தீக்கைதனிற்பிதாமரித்தாற்றகன
மவ்வளவேயாம்வபனமாகாதென்றறிக. (கசக)

அத்தனது தீக்கைதனின் மனைமரித்தக்கா
லவனுக்குத்தகனமுடன்வபனஞ்செய்திடுக

---

* வாஸ்துகரணம்-வீடுகட்டல்.

ஈத்தமெனுங்காலத்திற்றகனவினைசெய்தா
னவில்வபனங்கொள்ளாதுபிண்டாந்தஞ்செய்வான்
சித்தமுடன்மற்றையநாட்செய்துகொள்கவபனஞ்
செப்புசபிண்டீகரணஞ்செய்யாமலிருந்தாற்
சுத்தமுறச்செயுமளவுமாசௌசமந்தச்
சுயங்கர்த்தாவானவனைவிடாதெனவேசொல்வர். ()

## சபிண்டீகரணம்.

அச்சபிண்டீகரணந்தான்பிரேதமோசன§மா
மதையொழிந்ததகனுதிபிரேதகன்மமவைதான்
நிச்சயமாந்தகனம்பாடாணத்தாபனநன்
னீராற்செய்தர்ப்பணம்பிண்டப்பிரதான*ஞ்சீர்
நவச்சவத்திசஞ்சயனனக்கினத்தைமுடன்
மருவேகோத்தரவிருத்திபோசனந்தானவமா
யிச்சகமெண்சிராத்தமெழிலேகோத்திட்ட
மேறியிடும்பஞ்சதசசோதகும்பச்சிராத்தம். (௧௪௫)

இவைகண்முதலானவெலாமுன்புரியுங்கன்ம
மெய்துபிரதானனுக்குமற்றையர்க்கும்பொதுவாம்
நவையில்சபிண்டீகரணம்பிரதானன்செய்யு
நற்கன்மமென்றறிகநவின்றதகனுதி
அவைதனக்கிங்கதிகாரியாவரிருபதின்ம
ரானவிவர்தம்பெயருமுறையுமறைந்திடுவாங்
குவைதருஞ்சீர்ப்புத்திரன்நன்மனைவிமகளன்பு
கூரவுடன்பிறந்தானிங்குரைத்தவிவர்மைந்தர். ௧௪௬

கூறுமவன்ருயரியமருமகளோங்கன்பு
குலவுசகோதரியவடன்புதல்வனருட்சபிண்டர்

§ பிரேதமோசனம்-பிரேதத்தன்மையை விடுதல்.

* பிண்டப்பிரதானம்-பிண்டமிடுதல்.

வீறுசமானோதகர்தாய்சபிண்டர்சோதகர்தம்
மெய்ப்புதல்வர்சீடனெச்சன்வியன்குரவன்கொண்
பேறுபெறுமருகனன்பார்தோழனடலரசன் [டு
பேசுமிவரென்றறிகபிறங்கிவரிலுண்மை
தேறுபிரதானன்புத்திரனொழிந்தோரெல்லாஞ்
சேரிரண்டாம்பிரதானரொனவறிகதெளிந்தே. ௧௪௫

உரைத்தவரிற்பிரதானனிலையென்னிலொழிந்தோ
ரொழுங்கிலேபிரதானராகுவதுமுறையாந்
தரைத்தலத்திற்பிரதானன்ருனிருந்தான்முதன்மை
தானிலதாமிரண்டாவார்தமக்கெனவேசாற்றும்
வரைத்ததொருபேதஞ்சேயுடன்பிறந்தோனவன்றன்
மைந்தனிவர்முதலோருந்தகனவதிகாரி
நிரைத்தமுதற்கருத்தனுக்கைவகைச்சுத்தியுளவாம்
நிகழ்த்துமவற்றின்பெயரும்பருவமுமீங்குரைப்பாம்

செய்யவருகின்றசம்ஸ்காராந்தம்‡பிண்டச்
செழுங்கிரியையந்தஞ்சஞ்சயனுந்தஞ்சேர்ந்த
மையலறுமேகோத்திட்டத்தினந்தன்மை
மருவுசபிண்டீகரணத்தந்தமென்றுபருவம்
ஐயமறுசௌளத்தின்முன்கனன†மாகு
மைந்துவயசினுக்குமுன்பிண்டப்பிரதானம்மேற்
றுய்யவெட்டினுள்ளத்திபெறுக்கலீராறுட்
சொல்லேகோத்திட்டமதின்மேற்சபிண்டீகரணம்.

எனவைந்தாஞ்சுத்தியவர்க்கினியிரண்டாங்கருத்த
ரென்பவருக்கெய்தியிடுஞ்சுத்திநால்வகையாஞ்
சொனசபிண்டீகரணவதிகாரிமரித்தாலுஞ் [ர்
சொலுமேகோத்திட்டவரைநான்கெனவேசொல்வ

‡ சம்ஸ்காராந்தம்-தகனாந்தம்.
† கனனம்-புதைத்தல்.

மணமகிழுஞ்சைவசமயந்தனிலேசமயி
  மைந்தனொடுசாதகன்போதகனிவர்மெய்விடுத்தாற்
கனமுறுமெய்ச்சமயாசாரம்பிழைத்ததோடங்
  கழிந்துநல்லசிவரூபமடைந்திடற்காரணத்தால். ()

தேசிகனுலந்த்யேட்டிசெய்வித்துப்பின்னச்
  சிவாகாரமானவவன்றேகமது தன்னை
ஆசில்சிவாக்கினிதன்னிலாகுதிசெய்திடுக
  வத்தினத்திலடைவின்வபனநக்கினமூடல்
பேசிடுநற்கூர்ச்சத்தாபனஞ்செய்துசமயி
  பெறும்புதல்வர்க்காய்க்கந்தர்சண்டர்கணேசர்க்கு
மாசிலவர்நாமத்தாற்றனித்தனியேமூன்று
  வண்மைபெறுதர்ப்பணமுமகிழ்வினொடுகொடுப்பான்.

சாதகனுசாரியனுமிவர்கடமக்கீசன்
  சதாசிவனற்சாந்தனிவர்தமதெழினுமத்தால்
ஆதரவின்மும்மூன்றுதர்ப்பணமுமாங்கே
  யறைபிண்டதானமுந்தர்ப்பணத்துணைபோசனமுங்
காதலுடன்புரிந்திடுகவிரண்டாநாண்முதலாக்
  கலந்தவகமுடிவளவுதினமொருதர்ப்பணஞ்சேர்ச்
சீதவறலாலேறப்புரிந்திடுகபிண்டந்
  தினமொன்றேதர்ப்பணத்தினளவுபோசனமாம். ()

அற்றவகம்பெற்றிடுநாளுஞ்ன்றியபாடாண
  மகமுடிவிலெடுத்திடுகபீடமுண்டேவிடித்து
மற்றையநாட்புரியுமேகோத்திட்டச்சிராத்த
  மற்றுமூவைந்தாகவகுத்தசிராத்தமுமோர்
குற்றமறப்புரிந்திடுகபிந்தினநாட்சமயி
  கூறியபுத்திரனிவரைக்கந்தர்சண்டர்கணேசர்
பெற்றவிவருடன்கூட்டிநற்சபிண்டீகரணம்
  பேதமறச்செய்திடுகசாதகர்போதகரை. (கடுக,

ஈசர்சதாசிவர்சாந்தரெனுமிவர்களுடனே
யேகமுறயோசிக்கவெழிற்சபிண்டீகரணத்
தாசகலவிச்சபிண்டீகரணத்தினாலே
யாசௌசந்தனினின்றுமதிசுத்தனானோன்
நேசமுறுவருடமட்டுஞ்சோதகும்பச்சிராத்த
நிகழ்மாதத்தைம்மூன்றுசிராத்தங்கடமையுங்
காசகலாட்டைத்திவசத்துடனட்டகாதி
களையுஞ்சீர்ச்சிவச்சிராத்தங்களைப்போற்புரிவான். ()

மொழியவருநக்கினத்தைமூடவருஞ்சிராத்த
முந்துதகனாந்தத்தின்மரித்தவனைக்குறித்துப்
பழியினவவத்திரமும்பச்சரிசிதானும்
பகர்ந்திடுநற்றக்கிணையுமுதலானபொருள்கள்
அழிவில்சிவதீக்கையுளவில்வாழ்வான்கையி
லளித்திடுகமுற்றத்தும்வீட்டருகுமல்லா
இழிவில்புறவாயிலிலேயாதல்பிதிர்களுக்கங்
கெழிலுறுமாலயமென்பதியற்றியிடக்கடவன். ( )

மூன்றுமேகலையுடனேவிதிப்படிசெய்பீட
முன்றாலப்பிரமாண*ங்குழிதோண்டக்கடவன்
தோன்றுபுகழ்க்குரவன்றான்கோமயத்தாற்சுத்தி
துலங்கிடும்பீடத்தினடுவொட்டைநீளத்தின்
ஒன்றுசெயுந்தருப்பையினாற்கூர்ச்சத்தைமுடிந்தங்
கெழில்பெறவைத்தப்பீடந்தனக்குமுன்னாங்குழியின்
ஊன்றுமெழிற்பாடாண¶ந்தானுயரிட்டிகைதா †
னுவப்பினொடுந்தாபிக்கவலதுசராவத்தில். ‡ (௧௫௪)

---

* தாலப்பிரமாணம்-பெருவிரலும் நடுவிரலுங் கொண்டளக்கப்படுமளவு.

¶ பாடாணம்-கருங்கல்.

† இட்டிகை-செங்கல்.

‡ சராவம்-சட்டி.

வைத்துத்தான்ருபித்துத்தர்ப்பணஞ்செய்திடுக
வரும்பீடமின்றியினுமொண்குழிமாத்திரர்தான்
கைத்தலத்தாற்கல்லிமுன்போற்கூர்ச்சமதின்வைத்து
கவில்பெறவேதாபிப்பான்சாதகர்போதகர்க்கு [க்
மொய்த்தபுகழீசாதிநாமங்களாலே
முன்புறத்தர்ப்பணம்புரிவான்சமயிபுதல்வர்க்கேர்
உய்த்ததிறற்கந்தர்திநாமங்களாலே
யோதியிடுதர்ப்பணமெள்ளுதகத்தாற்புரிவான். ( )

எற்றிடுதர்ப்பணத்தொகைதானல்வருக்குமடைவே
யெழுபத்தைந்துடனொருநூற்றிரண்டுநூற்றைம்பான்
கூற்றிடுமைஞ்ஞூற்றிருபத்தைந்தாகுமென்பர்
கொள்ளவிடும்பிண்டத்தின்குழுத்தானுஞ்சொல்லில்
ஆற்றிடுமீரைர்தீராறைம்மூன்றையாறு
மவரவர்களுடோறுமவையேற்றியறிக
சேற்றிடும்பிண்டோதங்கள்செய்யும்போதந்தத்
திகனமத்தாமிதயம்ஸ்வதாந்தத்தாற்செய்வான். ()

முந்தியசீர்ச்சமயத்தின்மூர்த்திகண்மூவர்க்கு
மும்மூன்றுதாபிக்கமுதனாளிலடுத்த
பிந்தியநாட்டொடங்கியாசௌசாந்தமளவும்
பேர்த்துமவர்க்கொவ்வொருதர்ப்பணமேற்றிப்புரிக
உந்தியசீர்ப்பிண்டமுதனண்முதன்மூவர்க்கு
மொவ்வொன்றுதனித்தனியாசௌசமுடிவளவும்
புந்தியதால்வழங்கிடுகதர்ப்பணாற்பிண்டம் பொருந்து
தொகைகாண்கவவரவர்க்குரைத்ததினத்தால். ௧௫௭

அறைந்ததினந்தனிலோடைந்தாநாளொன்பா
னனதினம்பதினோராநாளிவைகடன்னின்
நிறைந்தபிண்டோதகங்களுடன்மந்திரங்கடுபே
நிகழ்கந்தமலரின்றிநிகழ்த்திடுதல்விதியாம்

பறைந்தநவச்சிராத்தமொற்றைப்படும்பிராமணரைப்
பண்பினொடும்புசிப்பித்தல்சஞ்சயனமடைவே
உறைந்தமறையோர்முதலோர்முதனாண்மூன்றைந்தே
ழூறுநாளிற்செய்திடுகவிதற்கின்னுமுரைப்பாம். ( )

அடுத்தநவதினத்தினுமத்திபெறுக்கிடுத
லினவருக்குமண்பாண்டத்தாமருக்கன்வெள்ளி
கடுத்தசனியானவற்றிற்புரியாதுவிடுக
கருதியிவற்றிற்புரிந்தாற்குலநாசமாகும்
எடுத்தநல்லவாரத்திற்சிறப்பினொடுசெய்க
விழிந்தோர்நாளும்முயர்ந்தோரெல்லோர்க்குமாகுந்
தொடுத்தவகமுடிவுதனிற்பாடாணந்தன்னைத்
தொல்லுலகிலுள்ளவர்களெடுக்கும்வகைசொல்வாம்

நண்ணியவாசௌசாந்தநாடுதினந்தனின்முன்
னாட்டுசிலையுடனவனைக்கூர்ச்சாறுமலரும்
பண்ணிபநற்பிண்டமுதலினைத்தினையுமெடுத்துப்
பகர்பீடந்தனையிடித்துவாத்தியங்களுடனே
புண்ணியதீர்த்தக்கரையிற்கொண்டுபோய்ச்சலத்திற்
புக்குநடுவிட்டுநானம்புரிவான்பின்னர்
எண்ணியவாசௌசமெலாமேகியபின்றொடங்கி
யீரெட்டுச்சிராத்தமுமோர்வருடத்திற்செய்வான். ( )

செய்துநிறைவேறியபின்சேர்வருடாந்தத்திற்
றிவசமெழில்பெறச்செய்வானேகோத்திட்டத்தின்
எய்துமிரண்டாநாளிலெழிற்சபிண்டீகரண
மியற்றிடப்பட்டவன்றனக்கும்வருடாந்தந்தனிற்
பொய்யிலதாந்தர்ப்பணம்பிண்டீகரணந்தானே
பொருந்தினர்க்குமுன்னாளிற்சோதகும்பச்சிராத்தம்
பைதுலங்குபணிசுமந்தபடிமீதிற்செய்வான்
பகர்சபிண்டீகரணந்தான்பண்ணிடுநாட்பகர்வாம். ( )

ஆனசபிண்டீகரணமாதிரண்டாநாளி
லந்தணர்க்காம்பதின்மூன்றிலரசர்க்காம்வணிகர்க்
கூனமிலாவையொன்பான்றிவசத்திலாகு
முறைத்திடுமிந்நாளுமுன்சொலிருவர்க்குமாகும்
ஈனமிலாச்சூத்திரர்தாம்பிதிர்தினமீராறி
லியற்றிடுகவிதுமுன்சொல்லெல்லார்க்குமாகும்
மேனிகழுமகஞ்சபிண்டீகரணமுடிவளவும் [ப்பாம்.
விடாதெவர்க்கும்புநர்த்தகனஞ் செய்யுமுறையுரை

ஓர்மூன்றுதினத்தினுள்ளேபிண்டங்களெல்லா
முதவிவிடுவிதிதனிலேமுதனாளோர்பிண்டம்
சேர்தோன்றவிரண்டாநாளுபிண்டமூன்று
நாளதனிலைந்துபிண்டநன்றுகவிடுக
சார்தோன்றும்பூரணவாசவுசத்தினுள்ளே
கருதுமமாவாசைமாசப்பிறப்புவந்தாற்
பேர்தோன்றவருமுன்னேமரித்தவனைக்குறித்துப்
பிண்டோதகங்களெல்லாம்பிரியமுடன்கொடுப்பான்

நல்லமாதப்பிறப்புமமாவாசைதானு
நண்ணுகினும்பெற்றமகன்பிண்டோதகங்க
டோல்லவணிதனில்விடாதியற்றிடுகவொழிந்தோர்
சொல்கிரியையவன்போலத்தொடர்ந்துசெயலாகா
வெல்லவருங்கிரியையெல்லாமகத்துண்முடித்தாலு
மெய்தியிடுங்கல்லெடுத்தலகமுடிவிற்செய்க
அல்லறவிர்சபிண்டராதியர்செய்முறைமை [ம்.
யானவையுமறிந்திடவேதொகுத்தடைவினுரைப்பா

நாட்டியசீர்ச்சபிண்டர்தமக்கிரண்டாநாட்டொடங்கி
நவிலேகோத்தரவிருத்தியுதகமெனநவில்வர்
கோட்டியசீர்முத்தினவாசௌசர்களாமென்று
கூறுசமானோதகர்க்குங்குலவுதகத்திரயம்

ஈட்டியசீர்ப்பக்கிணியாசௌசரெனவியம்பு
மியல்புடையசோதகர்க்கேகோதகமென்றிசைப்ப
தீட்டியசீர்மூவருந்தம்மாசௌசமளவுஞ் [
செப்பியவிக்கிரியைகளைச்சிறப்புறவேசெய்வார். ( )

தரைமருவுநற்பிரமசாரிதாய்தந்தை
தானொழிந்தபேர்களுக்குந்தகனமுதலாகப்
புரையில்சபிண்டீகரணமுடிவுஞ்செய்தானேற்
புந்தியுடனுபநயனம்புரிந்துகொள்வான்மீண்டும்
வரையில்புகழ்ச்சைவத்திற்றகனுதிக்குரியோர்
வருக்கின்முனமுரைத்தவிருபதின்மர்க்குண்மாசில்
உரைமருவுசிவதீக்கை யுடையோரேபுரிக [மமே.
வொழுங்குநில்லார்க்கொண்ணுதென்றுரைத்திடுமாக

மைந்தனில்லாப்புருடனுக்குமனைவிக்கும்பெருமை
மன்னுகுரவன்றனக்குந்தம்பிக்குமன்பு
தந்ததோழன்றனக்குங்கத்தனுக்குஞ்சிறந்த
சகோதரிக்கும்புதல்வனுக்குநன்மாமன்றனக்கு
நந்தலிலாவேகோத்திட்டமாகச்செய்க
நலந்தருசீர்ப்பாருவணநயந்துசெய்யாதொழிக
அந்தணர்முன்மூவருக்குஞ்சூத்திரரென்பவர்க்கு
மானதொருவிதிதன்னையடைவினுரைத்திடுவார். ( )

அருந்துயர்சேராபத்தாங்காலங்கடனிலு
மக்கினியில்லாவிடத்துஞ்சிரகணகாலத்தும்
பொருந்துலகிற்றீர்த்தயாத்திரைசெல்லுமிடத்தும்
பூசுரர்முன்மூவர்களும்புகன்றவிதிப்படியே
திருந்துமெழிலாமசிராத்தஞ்செய்யக்கடவர்
செப்பிடுசூத்திரரிதுவேயெப்போதும்புரிக
தருந்திறல்சேர்தத்தமகன்சதுர்வன்னந்தனிலுந்
தகுபாருவணம்மாசிகம்பிண்டஞ்செயலாம். (௧௪௨)

ஆரியனாரியன்முதலோர்க்கந்த்யேட்டிபுரிக
வவனிலனேற்சாதகனுஞ்சாதகராதியர்க்காம்
பாரின்மிசைபுத்திரனும்புத்திரராதியர்க்காம்
பண்ணியிடுஞ்சமயிசமயிக்காகும்பகரிற்
சீரிலகுமிம்முறையுங்கிடைத்திலரேற்கிடைத்த
சீர்ச்சமயியாதியர்மேலோர்தமக்குஞ்செயலாம்
சாரியனுஞ்சிவதீக்கையுடையோர்க்குச்சிராத்த [ம்
நலம்பெறவேகொள்ளும்வகைநாடிவகுத்துரைப்பா

ஓங்குசமயந்தன்னிற்சமயமெழில்விசேட
முலோகசிவதன்மிணிநற்சாதியுளுத்தரணம்
பாங்குபெறுசிவதீக்கையைந்துவிதத்தோர்க்கும்
பண்பினொடுசிவச்ராத்தந்தானேபண்ணிடுக
தீங்குதருவைதிகச்சிராத்தங்களாகா
செய்தானேலிருவர்களுந்தீநிரயம்புகுவர்
ஈங்குவந்துசெயவேண்டிற்சிவச்ராத்தஞ்செய்தே
யியம்பியிடும்வைதிகச்சிராத்தம்பின்செய்வான். ( )

தேசமிசையிருவர்களுமேகோத்திட்டத்திற்
சிவனுக்குவிதிப்படியேநீலவிடைவிடுக
ஆசகனுஞ்சிராத்தங்களனைத்துஞ்செய்தானு
மவ்விடபம்விட்டிலரேற்பிசாசுருவமகலா
தேசிலாச்சிராத்தங்களென்பவையுஞ்செய்தே
யெழிலேறும்விடக்கடவனீசுரனுக்கன்பாற்
பேசவருமனைத்தினையுந்தொகுத்தவற்றிற்பயனும்
பேசிடுவாமுன்னுரைத்தபெற்றியெல்லாந்தேர்ந்தே

வேறு.

நல்லசமாதிக்குரியஞானிமுதற்பெரியோர்
இல்லமுறவிருந்தாலுமேனையர்க்குமிவர்க்கும்
அல்லறருமாசௌசமணுகுதலின்றாகும்
வெல்லவருமுத்திபுத்திவேற்றுமையினாலே (கஎக)

வேறு.

சாதியிற்சமயந்தன்னிற்சாற்றுமாச்சிரமத்துள்ளே
ஓதியநியமாசாரமுய்த்திடினும்பராவர்
நீதிகடவறினந்தோஷச்சயம்பிசாசேயாவர்
தீதில்சீர்ப்புதல்வர்முன்னோர்செய்யுநற்கடனாற்றீரும்.

வேறு,

தண்டமிழ்சேர்தென்கமலைஞானப்பிரகாசன்
றருங்கூடற்சம்பந்தசற்குருவினருளாற்
கண்டவிதியானவெல்லாந்தமிழாலிந்நூலிற்
கட்டுரைத்தாங்காணுதவிதியுளவுங்காணிற்
பண்டயன்மாலண்டர்கண்டபசுநூல்கள்போலப்
பழுதறையாதுள்ளபடிபகர்ந்தினிதுவிளங்கும்
அண்டர்தொழுந்தருமபுரஞானசம்பந்தேச
னருளியவாகமங்களெல்லாமறைந்திடுமங்கறிவாய் ( )

அண்டர்தொழுந்தென்கமலைஞானப்பிரகாச
னருள்வடிவாந்திருஞானசம்பந்தனடிசேர்
மண்டலமெண்செயவாணிமணவாளன்பாலிக்க வருங்
கவிதைமழைபொழிவோன்வளம்பதியானெல்லைத்
தண்டமிழாகரனுரைத்தானாசௌசவிதியைத்
தருகவெனச்செந்தமிழாற்குரவன்மகிழ்சிறந்தே
கண்டிமிழுமொழியுமையாள்கொண்டவிடைப்பாகன்
கண்டசிவாகமங்களிலேகண்டவிதிப்படியே (க௨

ஆசௌசதீபிகை முற்றிற்று.